# புதிய அமைச்சகம் புரிந்த பணிகள்

(13.5.1996-க்குப் பின்)

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

அமைச்சர்

தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாட்டுத் துறை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

2000

# புதிய அமைச்சகம் புரிந்த பணிகள்

**(13.5.1996க்குப் பின்)**


வழங்குபவர்

***முனைவர் மு. தமிழ்க்குடிமகன்***

அமைச்சர்

தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,

இந்து சமய அறநிலையத் துறை



*உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு*

**2000**

## Bibliographical Data


| | |
|---|---|
| Title | **Putiya Amaiccakam Purinta Panikal** |
| Author | **Dr. M. Thamizhkudimagan**<br>Hon'ble Minister for Tamil Official Language and Tamil Culture & Hindu Religious and Charitable Endowment. |
| Publisher | **International Institute of Tamil Studies,**<br>C.I.T. Campus, Tharamani,<br>Chennai - 600 113. |
| Publication No. | **331** |
| Language | **Tamil** |
| Date of Publication : | **2000** |
| Edition | **Revised Second** |
| Paper used | **TNPL 18.6 Kg Super Printing** |
| Size of the book | **1/8 Demy** |
| Printing types | **10 Points** |
| No.of pages | **64 Pages** |
| Price | **Rs. 15/-** |
| No. of Copies | **1200** |
| Wrapper Design | **V. Karunanithy** |
| Layout | **Parveen Karunanithy** |
| Printed by | ***The PARKAR***<br>293, Ahamed Complex 2nd Floor,<br>Royapettah High Road, Chennai 14.<br>Ph : 821 5684, email : theparkar@eth.net |

# தமிழ் ஆட்சிமொழி – தமிழ்ப் பண்பாட்டுத்துறை

13.5.1996 அன்று தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாட்டுத் துறை தனியாகப் பிரிக்கப்பட்டபோது அமைச்சரின் ஆளுகைக்குட் பட்ட பணிகள் இவைகள்தாம்.

1. அருங்காட்சியகம்
2. தொல்லியல் துறை
3. கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம்
4. கலை – பண்பாட்டு இயக்ககம்
   இதன்கீழ்க் கலைத்தொழில் கல்லூரிகள் – 2
   இசைக் கல்லூரிகள் – 3
   சிற்பக் கல்லூரி – 1
   சவகர் சிறுவர் இல்லம் – 3
   இயலிசை நாடக மன்றம், ஓவிய நுண்கலைக் குழு
5. தமிழ்ப் பல்கலைக்கழகம்
6. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
7. தமிழ் வளர்ச்சி இயக்ககம்
8. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்.

இவற்றை மட்டுமே மேற்பார்வையிட்டு மேலும் வளர்க்க வேண்டிய பொறுப்பு அமைச்சருக்கு. ஆனால், தமிழ் வளர்ச்சி கருதிப் பல்வேறு பணிகள்மேற்கொள்ளப் பெற்றன.

அவற்றைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

**பணிகளின் பட்டியல்**

1. அகரமுதலிகள்
2. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி
3. அஞ்சல்வழிக் கல்வி – தமிழ் வழி
4. அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம்

5. அரசு அருங்காட்சியகம்
6. அரசு அறிவிப்புப் பலகைகளில் திருக்குறள்
7. ஆசியவியல் நிறுவனம், சென்னை
8. ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்
9. இசைப்பள்ளி
10. இணையம் (Internet)
11. இந்திய ஆட்சிப் பணித் தேர்வு (I.A.S. Examination)
12. இயல் இசை நாடக மன்றம்
13. இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு
14. இலக்கணக் குழு
15. உயர்நீதிமன்றம், சார்பு நீதிமன்றங்களில் தமிழ்த் தட்டச்சுப்பொறி
16. உலகத் தமிழர் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு
17. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
18. ஊர்திகளில் தமிழ்
19. ஓவிய நுண்கலைக் குழு
20. கருநாடகத்தில் தமிழ்
21. கருவூலத்தில் தமிழ்
22. கலை பண்பாட்டுத் துறை
23. கலைச்சொல் அகராதி
24. கலைக் களஞ்சியம்
25. கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி
26. கலைத்தொழில் கல்லூரி
27. குறள் பரிசு
28. சவகர் சிறுவர் இல்லம்
29. சீர்காழி மூவர் தமிழிசை மன்றம்
30. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி
31. செம்மொழி
32. சென்னை – பெயர் மாற்றம்
33. தட்டச்சுப் பொறிகள்

34. தமிழ் இலக்கியச் சங்கப் பலகையில் குறள்பீடம்
35. தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்
36. தமிழ்ப் பல்கலைக்கழகம்
37. தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்
38. தமிழ் வளர்ச்சி வளாகம்
39. தமிழில் அகவி (Pager)
40. தமிழில் அறிவியல் நூல்கள்
41. தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்
42. தமிழில் மருத்துவம்
43. தமிழில் வழிபாடு
44. தமிழில் வேள்வி
45. தருமபுரிப் பகுதிகளில் தமிழ்
46. தலைமைச் செயலகத் துறைகளில் ஆய்வு
47. திராவிடப் பல்கலைக்கழகம்
48. துணையகராதி
49. தென்னகப் பண்பாட்டுமையம்
50. தொடர் வண்டி
51. தொல்லியல்துறை
52. தேர்வாணையம்
53. நாட்டுடைமை
54. நாளிதழ்கள் – இதழ்களுக்குப் பரிசு
55. நிதியுதவி
56. நிரந்தரக் கண்காட்சி
57. நினைவுச் சின்னங்கள்
58. நூல் உதவி
59. நூல் விற்பனை முனைப்புத் திட்டம்
60. நூற்றாண்டு விழாக்கள்
61. பாகம் 1 – தமிழ்

62. பேச்சொலிப் பிழை நீக்கக் குறும்படம் தயாரிப்பு
63. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்
64. மழலையர் பள்ளிகளில் தமிழ்
65. மொழிப்போர்க் காவலர்கள்
66. யாழ் நூலகத்திற்கு நன்கொடை
67. வரலாறு
68. வானூர்தியில் தமிழ்
69. வானொலி
70. விருதுகள்
71. விளம்பரப் பலகை
72. வெளி மாநிலம்
73. வெளிநாட்டு உதவி
74. வெளிநாடுகளுக்கு நூல் அனுப்பும் திட்டம்
75. 2000க்குள் "எங்கும் தமிழ் – எதிலும் தமிழ்" – சிறப்பாய்வு

பல துறைகளில் அமைச்சர் புகுந்து பார்க்கும்போது அதிர்ச்சி தரத்தக்க உண்மைகள் புலப்பட்டன. சில இடங்களில் அதிரடி நடவடிக்கை எடுத்துத்தான் இவற்றைச் செம்மை செய்ய நேர்ந்தது.

இவற்றின் விளைவாக உள்நாட்டுத் தமிழர்களும், வெளிநாட்டுத் தமிழர்களும் ஒரு நம்பிக்கை பெற்று அரசுக்குச் செய்தி தருகிறார்கள்; வேண்டுகோள் வைக்கிறார்கள். அவர்களிடம் ஒருவகை நம்பிக்கை தோன்றியிருக்கிறது. இதழ்களில் எங்காவது ஓரிடத்தில் 'தமிழ் வளர்ச்சித் துறை' நினைவு கூரப்படுகிறது. அல்லது அமைச்சர் கவனிப்பார் என்று நம்பிச் செய்திகளை வெளியிடுகிறார்கள். 'கவனிப்பாரா?' எனும் தலைப்பு அடிக்கடி வருகிறது. பொதுவாக, இதழ்களில் இப்போது எதிர்ப்பு இல்லை. கேலி, கிண்டல் இல்லை. துறை முயற்சிகள் வலுவானவை என்பதைப் புரிந்து கொண்டு அவை (ஆதரவு) சார்பு நிலைக்கு வந்துள்ளன. எனவே,

1. பலரிடமும் ஓர் எதிர்பார்ப்பு
2. இதழ்களின் கவனத்தைக் கவர்ந்த நிலை
3. இதழ்களில் எதிர்ப்பை அகற்றிய நிலை

இத்துறை தன்னை நிலைநாட்டிக் கொண்டுள்ளது. இந்நிலையில், அமைச்சகம் மேற்கொண்டுள்ள வளர்ச்சிப் பணிகளைத் தொகுத்தளிக்க வேண்டியது கடமையாகிறது.

**அகரமுதலிகள்**

கி.பி. 8ஆம் நூற்றாண்டில் 'நிகண்டு' உருவாகியது. ஒரு சொல் லுக்கான பொருள்களைக் கவிதையில் அடக்கி அனைவரும் நினை விற் கொள்ள வைத்த காலம் அது. அவ்வகையில் இதுவரை 22 நிகண்டுகள் வெளிவந்துள்ளன.

ஒரு சொல்லைக்காட்டி எதிர்வரிசையில் அதற்கான பல பொருள் களையும் அடுக்கும் உரைநடை அகராதி முறை 1732ல் வீரமாமுனிவ ரால் தோற்றுவிக்கப்பட்டது. அவர் இயற்றிய 'சதுரகராதி' வழி காட்டி யது. இன்று 64க்கு மேற்பட்ட அகரமுதலிகள் வந்துவிட்டன.

இந்நிலையில் தமிழ் வளர்ச்சித்துறை ஓர் அருமையான முயற் சியை மேற்கொள்ள நேர்ந்தது. அதில் ஒன்றுதான் 'செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்டம்.' 1969இல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சியில் இருந்தபோதே உலகத் தமிழ்க் கழகத் தூதுக்குழு சென்னை வந்து அமைச்சர்களைச் சந்தித்தது. அன்றைய கல்வி அமைச் சர் விரைவில் ஒரு மாதிரி வரைவைக் கொண்டுவந்து காட்டிடச் சொன்னார். ஆனால், குறித்த காலத்திற்குள் வரைவுப்படி வழங்கப்படவில்லை.

எனினும் கோரிக்கையை ஏற்று 1974இல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே மிகுந்த பெருந்தன்மையுடன் 'செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்' ஒன்றை நிறுவி அதற்குப் பாவாணரை இயக்குநராக்கினார்.

ஆனால், ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக (1974 -1980) முழுமை யாக உழைத்தும் பாவாணரால் 'ஆசைமொழி' வரைதான் எழுத முடிந்தது. 1981 இல் அவர் மறைந்தார். அதன்பின் 1985 சனவரியில் அந்த முதல் தொகுதி வெளிவந்தது.

1989இல் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகனார் கல்வி அமைச்சர். இரண்டாம் தொகுதி அணியமானது. எனினும், இது 8.5.1992இல் தான் வெளிவந்தது.

13.5.1996இல் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாட்டிற்கெனத் தனி அமைச்சகம் அமைந்தபின் வேலைகள் வேகமாக முடுக்கி விடப் பட்டன. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே வரவு-செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு அறிவித்தார்.

> "1974ஆம் ஆண்டில் கழக அரசினால் நிறுவப்பட்டு, இடைக்காலத்தில் மிகவும் நலிந்து போயுள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் வேகமாகச் செயற் படவும், எஞ்சியுள்ள தொகுதிகள் யாவும் ஐந்தாண்டு கட்குள் முடிக்கப்படவுமான வகையில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது."

அதன்படித் தமிழன்பர்கள் பலர் அகரமுதலி இயக்ககத்தில் பொறுப்பேற்றனர். மூன்றாம் பாகம் 25.2.1997இல் வெளிவந்தது. 'அ' முதல் 'ஔ' வரையிலான சொற்கள் வந்துவிட்டன. நான்காம் பாகம் 'க' என்ற எழுத்துக்கான சொற்களஞ்சியமாக 16.01.2000 அன்று வெளியானது. ஐந்தாம்பாகம் 'கா-கூ' வரையிலான சொற்களை உள்ளடக்கி நவம்பர் 2000த்தில் வெளிவந்துள்ளது. இப்போது பிற தொகுப்புகட்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இது நம்பிக்கை தரும் ஆக்கப்பணி. ஆனால் 'அதிர்ச்சி தரும் அகரமுதலி' நிலைகளும் உண்டு.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் சார்பில் 'ஆட்சிச் சொல் அகராதி' வெளியிடப்பட்டுள்ளது. 'ஆட்சிமொழி'யைச் செயற்படுத்தும் நோக்கில் இந்த அகராதியின் முதல் பதிப்பு 1957ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது. இரண்டாம் பதிப்பு 1962ஆம் ஆண்டிலும், மூன்றாம் பதிப்பு 1971ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. 1983இல் நான்காம் பதிப்பு வெளியிடப்பட்டது (இது 306 பக்கங்களைக் கொண்டது).

நான்காம் பதிப்பின் மறுபதிப்பு 1990ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது (இதை ஐந்தாம் பதிப்பாகக் கொள்ளலாம்.).

இப்பதிப்பில் ஏறத்தாழ 9000 ஆட்சிச் சொற்கள் இடம்பெற்றுள் ளன. அலுவலகங்கட்குத் தேவையான ஆட்சிமொழிச் சொற்களை மட்டுமே கொண்டதாக இப்பதிப்பு விளங்குகிறது. வேளாண்மைத் துறை, பொதுப்பணித்துறை, காவல்துறை போன்ற 78 துறைகளுக்கான சிறப்புச்சொல் துணை அகராதிகளும் தனியே வெளியிடப்பட்டுள்ளன.

1996இல் தனி அமைச்சர் பொறுப்பேற்றதும் துறை மிகவும் வேகமாக நடைபோட்டது. ஆட்சிச் சொல்லகராதியை மீண்டும் புதுப் பித்து வெளியிடலாமா என்று சிந்திக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற அகராதியின் கையிருப்பு ஏதேனும் உண்டா எனத் துருவிப் பார்த்தபோதுதான் அமைச்சர் அதிர்ச்சி அடைந்தார். பல படிகள் அச்சிடப்பட்ட நிலையில், அரசு மைய அச்சகத்திலேயே அப்படியே இருந்தன. அதன்பிறகு பார்த்தால் அரசு எழுது பொருள்துறை விற் பனைப் பிரிவிலும் பல படிகள் அப்படியே இருந்தன. 7 ஆண்டுகளாகி யும் அச்சகத்திலும், விற்பனைப் பிரிவிலுமே பல படிகள் அப்படியே இருக்குமானால் ஆட்சி மொழியைச் செயற்படுத்துவதில் என்ன வேகம் இருந்திருக்க முடியும்? இது தெரிந்ததும் 23.8.1997 அன்று அமைச்சரே அரசு மைய அச்சகம் சென்று ஆராய்ந்தார். அவர்கள் அளித்த அறிக்கையைப் பாருங்கள். நீங்களே அதிர்ச்சியில் உறைந்து போவீர்கள். 23.8.1997இல் அச்சகத்தில் கையிருப்பு (கிடங்கில் தூங்கிக் கொண்டிருந்தவை)

1. **ஆட்சிச் சொல்லகராதி (1990ஆம் ஆண்டு – நான்காம் பதிப்பின் மறுபதிப்பு) – 9,000 படிகள்**
2. **வனத்துறைச் சிறப்புச் சொல் துணையகராதி – 400 படிகள்**
3. **ஆட்சிச் சொல்லகராதி கையடக்கப் பதிப்பு (1990 – 11,487 படிகள்**
4. **ஆட்சிச் சொல் இணைப்பகராதி – 43,250 படிகள்**

1990 முதல் 1997 வரை கீழ்க்கண்டவர்கள் தமிழ் வளர்ச்சி இயக்குநர்களாக இருந்துள்ளனர். அவர்கள் ஏன் இதில் கவனம் செலுத்தவில்லை என்று தெரியவில்லை.

| இயக்குநர்கள் | பதவி வகித்த காலம் |
|---|---|
| 1. திரு. கு. சிவஞானம் | 18.8.89 முதல் 31.12.91 வரை |
| 2. திரு. த. பெரியாண்டவன் | 1.1.92 முதல் 31.12.92 வரை |
| 3. திரு. ஆ. பன்னீர்செல்வம் (பொறுப்பு) | 1.1.93 முதல் 27.10.93 வரை |
| 4. திரு. சி. செல்வராசு | 28.10.93 முதல் 30.4.95 வரை |
| 5. திரு. ஆ. பன்னீர்செல்வம் (பொறுப்பு) | 1.5.95 முதல் 5.3.97 வரை |

கு. சிவஞானம், த. பெரியாண்டவன், சி. செல்வராசு போன்றவர்கள் இருந்தும் இந்த நிலையா என்று வியக்க வேண்டியுள்ளது.

பின்னர் இணை இயக்குநராகப் பதவி உயர்வுபெற்ற ஆ. பன்னீர் செல்வம் முதலில் 10 மாதங்களும், பின்னர் 22 மாதங்களும் பொறுப்பில் இருந்துள்ளார். ஆழ்ந்து கவனித்துப் பணி செய்யாத காரணத்தால் தான் இந்த நிலை.

தற்போது, உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேங்கியுள்ள படிகளை முறைப்படி விலைக்குத்தான் கொடுக்க வேண்டும். இனி எப்போது இவற்றை விற்பது என்ற எரிச்சலில் அனைத்தையும் இலவசப் படியாகவே பல துறைகளுக்கும் கொண்டு செல்லவேண்டும் எனும் முறையில் கோப்பு அணியமாக்கப்பட்டது. அந்த முயற்சியின் விளைவாக உரூ. 7.50 இலட்சம் தள்ளுபடி செய்து மாண்புமிகு முதல்வர் ஆணையிட்டார்.

உடனே வேகம் வேகமாக அனைத்துத் துறைகளுக்கும் படிகள் அனுப்பப்பட்டன. இப்போதுதான் பல அலுவலகங்கள் ஆட்சிச்சொல் அகராதிகளையே பார்த்துள்ளன.

தேங்கியுள்ள படிகள் அனைத்தும் அலுவலகங்கட்கு அனுப்பப் பட்டுள்ளது. மேலும் தேவையிருப்பதால் இப்போது 'ஆட்சிச்சொல் அகராதியில் 20000 படிகள் அச்சாகிக் கொண்டிருக்கின்றன.

இதுபோக, மற்றோர் அதிர்ச்சிச் செய்தியும் இங்கே உள்ளது. 'தமிழ் - தமிழ் அகராதி' யொன்றை அரசே வெளியிடலாம் என்று நினைத்தபோது தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட 'தமிழ் - தமிழ் அகராதி' கவனத்துக்கு வந்தது.

மு. சண்முகம் பிள்ளையைத் தொகுப்பாசிரியராகவும், அ.ச.ஞா., அ.மு.ப., கொண்டல் ஆகியோரை மேலாய்வாளர்களாகவும் கொண்டு 1985இல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட 'தமிழ்-தமிழ் அகராதி'யின் அன்றைய விலை உரூ.100/- படிகள் 5000 வெளியிட்டுள்ளனர்.

1996இல் அமைச்சர் பொறுப்பேற்றபின், தீர்ந்துபோன அந்த நூலைத் திருப்பி அச்சிடலாம் என முயன்றபோதுதான் ஒரு புது உண்மை தெரிந்தது. ஆம்! 3000 படிகள் விற்கப்படாமலேயே கடந்த 11 ஆண்டுகளாகக் கிடங்கிலேயே வைக்கப்பட்டுள்ள அதிர்ச்சிச் செய்தி கிடைத்தது. அதிர்ந்து போனார் அமைச்சர். 1015+35=1050 பக்கங்களுடன் 64,048 சொற்களுக்கான பொருள் விளக்கத்துடன் கூடிய அகரமுதலி இன்று அச்சிட்டால் ஒரு நூலின் விலை உரூ. 800க்கு மேல் ஆகலாம். ஆனால் அன்று 100 உரூபாயிலேயே கிடைக்கக் கூடிய 3000 படிகள் விற்கப்படாமல் தேங்கியிருந்தன.

அவற்றை வெளிக்கொணரவும் மாவட்டந்தோறும் விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

மற்றோர் அதிர்ச்சியும் உள்ளது. தமிழில் சுருக்கெழுத்துப் பயின்றோர் இப்போது அதிகம் தேவைப்படுகின்றனர். அந்தவகையில் அவர்கள் பயில்வதற்கான தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் கிடைப்பதில்லை என்றும், அதை மறுபதிப்புச் செய்து வெளியிடத் தமிழ் வளர்ச்சித்துறை முன்வரவேண்டும் என்றும் அன்பர்கள் பலர்மடல் எழுதினர். இந்த நூலை வெளியிட்ட தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தில் ஆய்வு செய்யப்பட்டது. இங்கும் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

இந்த நூலிலும் 2200 படிகள் விற்கப்படாமல் கிடங்கில் முடங்கிக் கிடந்தன என்பதைப் பார்த்தபோது எப்படியிருக்கும்? வெளியிலோ நூல் கிடைக்கவில்லையே என்ற தவிப்பு. துறைக்கோ மறுபதிப்பு நூலை வெளியிடவேண்டுமே எனும் துடிப்பும் முயற்சியும். ஆனால் நிறுவனமோ நீண்ட தூக்கத்தில் இருந்துவிட்டது.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' எனும் வகையில் 'அகரமுதலிகள்' பற்றி மட்டும் இங்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

எனினும் தமிழகம் அறிந்துகொள்ள வேண்டும் எனும் முறையில் 13.5.1996க்கு முன் இருந்த நிலையும் இத்துறை தனித்தியங்கத் தொடங்கிய பின் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளும் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

தமிழக அரசின் இந்த முயற்சியைத் தமிழ் அறிஞர்கள் உணர்ந்து பாராட்டுவதுடன் மேலும் சிறப்படைவதற்கான கருத்துரைகளையும் வழங்க வேண்டுகிறோம்.

இக்கருத்துகளை நூல்வடிவில் பெறவிருக்கும் தமிழ் மக்களும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், உலகத்தின் பிற பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்களும் நூல் வடிவில் இவற்றைப் பெற்றும், இணை யத்தின் வாயிலாக இவற்றைப் பார்த்தும் ஒரு தெளிவான நிலையை உணர்வார்கள் என்று நம்புகிறோம்.

இனி, ஓர் ஒப்பீட்டுப் பட்டியலைக் காணலாம்.

# 13.5.1996க்கு முன்னும் பின்னும்

**பணிப்பிரிவு**

*1. அகரமுதலி*

**13.5.1996க்கு முன்**

முன்னர் விளக்கம் தரப்பட்டுள்ளது

**பணிப்பிரிவு**

*2. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்*

**13.5.1996க்கு முன்**

திங்கள் வருமானம் உரூ.400/-க்கு மேற்படாத -58 அகவை முடிந்த தமிழறிஞர்கள் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத்தகுதிபெற்றவர்களாவர். நிதியுதவிக்குத் தெரிவு செய்யப் பெறுவோர்க்குத் திங்கள் தோறும் உரூ.400/- வீதம் நிதியுதவி வழங்கப் பெற்று வந்தது.

**இந்த ஆட்சியில்**

இத்தொகை 10.9.1996 முதல் உரூ.500/- ஆக உயர்த்தி வழங்கப் பெற்று வருகிறது. இப்போது 467 பேர் பயன் பெற்று வருகின்றனர்.

**பணிப்பிரிவு**

*3. அஞ்சல் வழிக் கல்வி - தமிழ்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக அஞ்சல் வழியில் தமிழ்க் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மொரீசியசு, ரீயூனியன், டர்பன், மடகாசுகர் ஆகிய பகுதிகளில் இக்கல்வியைத் தொடரவும், மொரீசியசில் உள்ள

மகாத்மா காந்தி நிலையம் இதன் தொடர்பகமாக விளங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் பி.ஏ., (தமிழ்), பி.லிட்., எம்.ஏ., (தமிழ்) பட்ட வகுப்புகளும் அடங்கும்.

**பணிப்பிரிவு**

*4. அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

1869ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற இந் நூலகத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி, இசுலாமிய மொழிகளில் மொத்தம் 72,814 சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழில் மட்டும் 16,000க்கும் மேற்பட்ட சுவடிகள் உள்ளன. இந் நூலகம் இது வரை ஏறத்தாழ 420 நூல்களை வெளியிட்டுள்ளது. 1996இல் இந்நூலகத்தில் குளிர்பதன வசதி செய்யப்பட்டது. ஏறத்தாழ 4000 சதுர அடிகள் கொண்ட மிகப்பெரிய இருப்பறை முழுவதும் குளிர் சாதனத்தின்கீழ்க் கொண்டு வரப்பெற்றது. இது தமிழ் நாட்டுக்கே பெருமை அளிப்பதாக இருக்கிறது என்று நூலகத்திற்கு வருகைதரும் அனைவரும் அரசைப் புகழ்கின்றனர். அழியவிருந்த சுவடிகள் அரசால் பாதுகாக்கப்பட்டன என்றே நன்றியுடன் கூறுகின்றனர். இதற்குத் தமிழக அரசு நல்கிய தொகை உரூ. 13.32 இலட்சம் ஆகும். அனைத்துச் சுவடிகளையும் நுண்படச் சுருளில் கொண்டுவர அரசு உரூ.25 இலட்சம் ஒதுக்கி, நுண்படக்கருவி (Microfilm) வாங்கப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*5. அரசு அருங்காட்சியகம்*

**13.5.1996க்கு முன்**

ஏற்கனவே 12 மாவட்டங்களில் இருந்தன.

**இந்த ஆட்சியில்**

பழநி, திருவாரூர், சிவகங்கை, காஞ்சிபுரம், நாகை, இராமநாதபுரம், கரூர், விருதுநகர் ஆகிய எட்டு இடங்களில் புதிய அருங்காட்சியகங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

கபிலர் எழுதிய 'குறிஞ்சிப் பாட்டு' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள 96 மலர்களைப் பற்றிய காட்சி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. முதலில் குறிஞ்சிப்பாட்டில் இருக்கின்ற மலர்களின் பெயர்களும் தற்காலத்தில் வேறு பெயர்களில் மாறி வழங்கினால் அவற்றின் பெயர்களும் பயிரியல் (Botany) நூலில் கூறப்பட்டுள்ள அவற்றிற்கு இணையான பெயர்களும் (Botanical names) ஒரேநேரத்தில் தொகுக்கப்பட்டுப் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன. இதற்கு அருங்காட்சியகத்தின் பயிரியல் பிரிவும், சென்னைக் கிறித்துவக் கல்லூரி, அரசு சித்த மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் மூலிகைப் பிரிவு களும் உதவியுள்ளன. இந்த மலர்கள் அனைத்தும் பாடம் செய்யப்பட்டுள்ளன. தமிழக வரலாற்றில் இது முதல் முயற்சியாகும்.

**பணிப்பிரிவு**

*6. அரசு அறிவிப்புப் பலகைகளில் திருக்குறள்*

**இந்த ஆட்சியில்**

அரசின் தலைமைச்செயலகத் துறைகளிலும், துறைத் தலைமை அலுவலகங்களிலும் தன்னாட்சி நிறுவனங் கள், வாரியங்கள், கழகங்கள், இணையங்கள் ஆகிய வற்றில் தலைமை அலுவலகங்களிலும் ஆட்சிச்சொல் அகராதியில் உள்ள சொற்களில் நாள் தோறும் ஓர் ஆங்கிலச் சொல்லையும், அதற்குரிய தமிழ்ச் சொல் லையும் ஒரு திருக்குறளைப் பொருளுடனும் கரும் பலகையில் எழுதி வைக்கவேண்டுமென ஆணையிடப் பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*7. ஆசியவியல் நிறுவனம்* (INSTITUTE OF ASIAN STUDIES), *சென்னை.*

**13.5.1996க்கு முன்**

தமிழியல் ஆய்வுக்காகத் தமிழக அரசிடமிருந்து பெற்ற தொகை உரூ. 11 இலட்சம்.

**இந்த ஆட்சியில்**

1996 - 97 இல் வழங்கியது உரூ. 19 இலட்சம்; 1997 - 98 இல் உரூ. 20 இலட்சம், தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சியம், தமிழ் - சப்பான் - தெலுங்கு - கன்னடம் அகரமுதலி ஆகிய பணிகள் நடக்கின்றன. 1998-99ஆம் ஆண்டு மானியமாக உரூ. 20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1999 - 2000 இல் வழங்கப் படும் மானியம் ரூ. 22.50 இலட்சம்.

**பணிப்பிரிவு**

*8. ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்*

**13.5.1996க்கு முன்**

ஆண்டுக்கு ஆறு மாவட்டங்கள் எனும் அளவில் நடை பெற்றன.

**இந்த ஆட்சியில்**

ஆட்சிமொழிக் கருத்தரங்குகளால் பெரும்பயன் விளை கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அனைத்து அலுவலர்களும் ஒரே இடத்தில் கூடியிருக்கும் நிலை யில் ஆட்சிமொழி தொடர்பான அரசாணைகள், தற் போதுள்ள குறைகள் ஆகிய அனைத்தும் சுட்டிக் காட் டப்படுகின்றன. அரசின் மேல்மட்ட அலுவலர்களும், துறை வல்லுநர்களும் கலந்துகொண்டு பேசுகின்றனர்.

அந்தந்த மாவட்டத்தில் உள்ள வணிகவரித்துறை, மருத்துவத்துறை, கூட்டுறவுத்துறை மற்றும் பல துறை வல்லுநர்களும் அந்தந்த ஊரில் உள்ள தமிழறி ஞர்களும் பங்கு பெற்றுப் பல கருத்துக்களைக் கூறு கிறார்கள். பொதுமக்களிலும் பலர் திரண்டு வந்து

கேட்கின்றனர். 1996க்குப் பின் கீழ்க்கண்ட மாவட்டங்களில் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன.

மாவட்ட அலுவலகங்களைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 85 விழுக்காடு தமிழ் ஆட்சிமொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. அதனை 100 விழுக்காடாக ஆக்கிட மேலும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்கள் ஒரு மாதத்தில் 10, 15 அலுவலகங்களை மட்டுமே ஆய்வு செய்கின்றனர். இம்முறை ஒரே நேரத்தில் 10க்கும் மேற்பட்ட உதவி இயக்குநர்களை ஒரு மாவட்டத்திற்கு அனுப்பி அதிரடியாக ஒரு மாவட்டத்திலுள்ள அத்தனை அலுவலகங்களும் ஆய்வு செய்யப்பட்டன. அந்த வகையில் இதுவரை அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வுகள் முடிக்கப்பட்டு, 10000/- க்கும் மேற்பட்ட அலுவலகங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*9. இசைப்பள்ளி*

**13.5.1996க்கு முன்**

சென்னை, மதுரை, கோவையில் மூன்று இசைக் கல்லூரிகள் மட்டுமே இருந்தன.

**இந்த ஆட்சியில்**

திருவையாறு தமிழ் இசைக்கல்லூரி மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சீர்காழி, சிவகங்கை, கிருட்டிணகிரி, இராமநாதபுரம், ஈரோடு ஆகிய 17 மாவட்டத் தலைநகர்களில் புதிய இசைப்பள்ளிகள்-102 இசைவல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு. மூன்றாக இருந்த நிறுவனங்கள் 21 ஆகியுள்ளன.

**பணிப்பிரிவு**

*10. இணையம்* (Internet)

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

இணையம் என்பது இப்போது உலகமெங்கும் மேலோங்கியுள்ள தகவல் தொடர்புக் கருவியாகிவிட்டது. 1997-98ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் தமிழகச்சட்டமன்றத்தில் படைக்கப்பட்ட சிறிது நேரத்தில் இணையத்தின் மூலம் உலகமெங்கும் உள்ளவர்கள் தெரிந்து கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

மாண்புமிகு முதல்வர், அமைச்சர், செயலர் அறைகளில் இத்தொடர்புச் சாதனம் அமைக்கப்பட ஏற்பாடாகி உரூ. 7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. 25.8.1998 முதல் மாண்புமிகு முதல் அமைச்சர் மற்றும் அமைச்சர் அறையில் இயங்கிடத் தொடங்கியுள்ளது. இவ்விணையத்தில் தமிழக வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ்க் கலைகளின் சிறப்பு, சுற்றுலாவருபவர்கட்கான வழிகாட்டுதல் ஆகியவை 'செய்திப் பக்கம்' (Home Page) எனும் முறையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் தரப்படும்.

இதுபற்றிய முழுமையான இணைப்புக்காகக் சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டுக்குத் தமிழக அரசு அமைச்சரை அனுப்பிவைத்தது.

விரைவில் தமிழக அரசின் சாதனைகள் அனைத்தையும் இணையத்தில் பார்க்கலாம். உலகத் தமிழர்களும், தமிழ் பற்றி அறிய விரும்பும் பிற மொழியாளரும் இதனால் பயன்பெறுவர்.

1999 பிப்ரவரியில் உலகத் தமிழ் இணையம் மாநாடு தமிழக அரசால் நடத்தப்பட்டு, கணினியின் விசைப் பலகை ஒரேசீராக்கப்பட்டதுடன், உலகத் தமிழ் இணை

யப் பல்கலைக் கழகம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

முதன்முதலில் இணையத்தில் வாழ்த்துச் செய்தி வழங்கிய பெருமை இந்தியாவிலேயே தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு. இந்தியாவிலேயே இணையத்தில் அதிகப் பக்கங்களைக் (Home Page) கொண்ட மொழி தமிழ்தான் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. உலகில் உள்ள தமிழர்கள் அனைவரையும் இணையம் இணைக்கிறது.

கி. பி. 2000 ஆண்டில் 'தமிழ் இணையம் 2000' எனும் பெயரில் சிங்கப்பூரில் முன்றாவது மாநாடு நடைபெற்றது. தமிழ் அமைச்சர் இதில் கலந்து கொண்டார். தமிழக அரசு ரு. 1 கோடி வைப்புநிதியாக ஒதுக்கி தமிழில் புதிய மென்பொருள்கள் வெளிவர உதவி இருக்கின்றது. தகவல் தொழில்நுட்பத் துறையின் உச்சகட்டமாக ரூ.338 கோடியில் மென்பொருள் பூங்கா ஒன்றினைத் தமிழக அரசு உருவாக்கியது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அற்புதச்சாதனையை இந்தப் பூங்காவினைத் திறந்து வைத்த மாண்புமிகு தலைமையமைச்சர் திரு. வாஜ்பாய் அவர்கள் பெரிதும் பாராட்டி இருக்கிறார்கள்.

முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் முனைவர் பொன்னவைக்கோ அவர்களை இயக்குநராகக் கொண்ட தமிழ் இணையப் பல்கலைக்கழகம் செயற்படத் தொடங்கியுள்ளது. தமிழை அறிவியல் தமிழாக்கி உலகிலுள்ள 39 நாடுகளில் உள்ள தமிழர்கள் அனைவரும் தொடர்புகொண்டு மகிழச் செய்துள்ளது தமிழக அரசு. இதுவரை தமிழில் 17 மென்பொருள்கள் வந்துள்ளன.

**பணிப்பிரிவு**

*11. இந்திய ஆட்சிப் பணித் தேர்வு* (I.A.S. Examination)

**13.5.1996க்கு முன்**

---------

**இந்த ஆட்சியில்**

இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகள் தமிழில் எழுதப்பட்டால், அதிகம் பேர் வெற்றிபெற வாய்ப்பு உள்ளது. அதனால் தமிழ்மொழி மற்றும் இலக்கிய வரலாறு, புவியியல், வரலாறு போன்ற பாடங்களைத் தனித் தனியே தொகுத்து வெளியிட - இந்திய ஆட்சிப்பணித் தேர்வு எழுதுவோர்க்கு உதவி செய்திட அரசு முன்வந்துள்ளது. இதற்காக உரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குழு அமைக்கப்பட்டு, இப்போது தமிழ் மொழி, இலக்கிய வரலாறு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*12. இயல் இசை நாடக மன்றம்*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

இதுவரை இருந்த நல்கைத் தொகை உரூ. 25 இலட்சம் உரூ. 45 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. புகழ்பெற்ற கலைஞர்களின் மறைவுக்குப்பின் தடுமாறும் குடும்பத்தாருக்கு நிதியுதவி அளித்தல் உரூ. 4.70 இலட்சத்திலிருந்து உரூ. 10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. நவீனக் கலையரங்கம் அமைக்க உரூ.34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நலிந்த கலைஞர்கள் எனும் முறையில் இதுவரை 4267 பேர் மாத உதவித் தொகை உரூ. 500/- பெற்று வருகின்றனர். ஆண்டு தோறும் 300 பேருக்கு வழங்கப்பட்டு வந்த நிலையை மாற்றி 500 பேருக்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மன்றத்தின் வாயிலாகத் தகுதிபடைத்த கலைஞர்கள் பலருக்கு 'கலைமாமணி' விருது வழங்கப்படுகிறது. இதுவரையிலும் 1116 பேர்களுக்கு 'கலைமாமணி' விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**பணிப்பிரிவு**

*13. இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு:-*

**இந்த ஆட்சியில்**

இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பை விளக்கி உரைக்கும் வகையில் "இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு" எனும் தலைப்பில் அரசியல், சமூகச் சீர்த்திருத்தம், விளையாட்டு, பொருளாதாரம், வரலாறு, கல்வி, நுண்கலைகள், இயல் அறி வியல், பொறியியல் தொழில் நுட்பம், மருத்துவம் ஆகிய பொருண்மைகளைக் கொண்ட நூலைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரித்து வெளியிடவும், கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், ஆய்வுகள் ஆகிய பொருண்மைகளில் தனித்தனியே ஐந்து நூல்களைத் தயாரித்து வெளியிடவும், உரூ. 16, 64, 180- ஒப்பளிப்புச் செய்யப்பட்டு இதற்கென வல்லுநர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு உரிய முறையில் கட்டுரைகள் எழுதும் பணியும், படைப்புகளைத் தொகுக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

**பணிப்பிரிவு**

*14. இலக்கணக் குழு*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களின் அடிப்படையில் இக்காலத் தேவைக்கேற்பவும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் எளிதில் பயன் கொள்ளத்தக்க வகையிலும் ஒரு புதிய இலக்கண நூலை எழுதி வெளியிடுவதற்காக வல்லுநர் குழு ஒன்றினை அமைக்கலாம் என்று கருதி, கீழ்க்கண்ட வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

1. பேராசிரியர் ச. பாலசுந்தரம், கரந்தை.
2. பேராசிரியர் ஆ. சிவலிங்கனார், மயிலம்.
3. முனைவர் இரா. திருமுருகன், புதுச்சேரி.
4. புலவர் த. சரவணத்தமிழன், திருவாரூர்.
5. பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள்
6. பேராசிரியர் தி.வே. கோபாலய்யர், தஞ்சை.
7. முனைவர் வா. ஞானசுந்தரம், மைசூர்.
8. பேராசிரியர் இராம. சுப்பிரமணியம், சென்னை.

முதற் கூட்டம் 28.9.98 அன்று மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமய அற நிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறையில் நடைபெற்றது. குழு உறுப்பினர்கள் எழுத வேண்டிய கட்டுரைகள் முடிவு செய்யப்பெற்று அதன்படிக் கட்டுரைகள் எழுதும் பணி நடைபெற்று வருகிறது.

**பணிப்பிரிவு**

*15. உயர்நீதிமன்றம், சார்பு நீதிமன்றங்களில் தமிழ்த் தட்டச்சுகள்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

உயர்நீதி மன்றம், சார்பு நீதிமன்றங்கள் ஆகியவற்றில் நகல் எடுப்பவர்கள் 862 பேர் உள்ளனர். இவர்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில் 862 தமிழ்த் தட்டச்சுகள் வாங்கிடத் தமிழக அரசு உரூ.65 இலட்சம் ஒதுக்கி ஆணை பிறப்பித்துள்ளது.

**பணிப்பிரிவு**

*16. உலகத் தமிழர் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

உலகமெங்கும் உள்ள 36 நாடுகளில் ஏறத்தாழ 87 இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் அனை

வரும் விரும்பித் தொடர்பு கொள்வது தாயகமான தமிழ்நாட்டோடுதான். அந்தவகையில் இன்றைய தமிழக அரசு உலகத் தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்து இன்று பலவகைகளிலும் உறவுகளை வலுப்படுத்தியுள்ளது. மொரீசியசு, சிங்கப்பூர் நாடுகளுக்குத் தமிழ்க்குழு நேரில் சென்று உரிய பணிகளைச் செய்துள்ளது. 22 நாடுகளுக்குச் சிறந்த நூல்களை அனுப்பும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், சிங்கப்பூர், மொரீசியசு, ரீயூனியன் முதலிய நாடுகள் ஒவ்வொன்றிற்கும் 100க்கும் மேற்பட்ட சிறந்த நூல்களை அனுப்பி வைத்ததன் வாயிலாக நம்மைப்பற்றி வெளிநாட்டுத் தமிழர்களும், வெளி நாட்டில் உள்ள தமிழ் விரும்பும் அறிஞர்களும் படித்துத் தெரிந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், சிங்கப்பூர், மலேசியா, துபாய், மொரீசியசு, டர்பன், ரீயூனியன் ஆகிய நாடுகளுக்கு அஞ்சல் வழிப்பட்ட வகுப்புப் பாடங்களும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் உலகத் தமிழர்களின் கருத்தை அறிந்துகொள்ளவும், தமிழகம் தரும் விடைகளைத் தெரிந்து கொள்ளவும் இப்போது இணையம் இயங்கி வருகிறது. இதன் வாயிலாக உலகத் தமிழர்களின் ஒருங்கிணைப்பு இன்று நடைமுறைக்குவந்துள்ளது. வருங்காலத்தில் இது பெரிய அளவில் வலுப்பெறும் என்று உறுதியாகக் கூறலாம்.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அலுவலகத்தின்தொலை இணையத்தின்விவரங்கள்.

வலைத்தளம் : http://chennai2.tn.nic.in/tamildev/
மின்அஞ்சல் : min-tcd@tn.nic.in

**பணிப்பிரிவு**

*17. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

**13.5.1996க்கு முன்**

இந்நிறுவனம் கடந்த ஆட்சிக் காலத்தில் உரூ.29 இலட்சம் உதவி பெற்று வந்தது.

**இந்த ஆட்சியில்**

1968இல் அறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டு, 1970இல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளது.

உதவித்தொகை உரூ.43 இலட்சம் என உயர்த்தப்பட்டது. பின்னர் உரூ.48.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. 1999-2000க்கான அரசு நல்கை 65.25 இலட்சமாக உயர்த்தப்பட்டது. கூடுதலாக மொழிப்பயிற்சிக் கூடம் (Language Lab) 'தமிழியல்' இதழ் ஒலிநாடா வெளியீடுகள், நூலக விரிவு ஆகியவற்றுக்காக அரசு உரூ.19,50,000/- ஒதுக்கியுள்ளது.

*18. ஊர்திகளில் தமிழ்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

ஊர்திகளில் காணப்படும் பதிவெண் பலகைகளில் ஆங்கில எழுத்துகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது தமிழில் அவற்றை எழுதிக் கொள்ள அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. எண்களைப் பொறுத்த வரையில் உலக எண்களையே பயன்படுத்தலாம்.
2. எழுத்துகளைக் கீழ்க்கண்டவாறு பயன்படுத்தலாம்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | ஆ | G | அ | N | நா | U | ய |
| B | இ | H | ஏ | P | ச | V | ர |
| C | ஈ | J | ஐ | Q | ட | W | ல |
| D | உ | K | ஒ | R | த | X | வ |
| E | ஊ | L | ஓ | S | ப | Y | ழ |
| F | எ | M | க | T | ற | Z | ள |

**பணிப்பிரிவு**

*19. ஓவிய நுண்கலைக் குழு*

**13.5.1996க்கு முன்**

உரூ.5 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டது. எனினும் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த அமைப்பே இயங்க வில்லை.

**இந்த ஆட்சியில்**

தற்போது உரூ.5 இலட்சமும், திட்டங்களைச் செயற் படுத்த உரூ.10 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய ஆட்சி நிருவாகக் குழுவைப் புதுப்பித் துள்ளது. ஓவியர் நடிகர் சிவகுமார் மற்றும் புகழ்மிகு ஓவியர்களை உள்ளடக்கிய குழு மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

**பணிப்பிரிவு**

*20. கருநாடகத்தில் தமிழ்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

கருநாடக மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தேர்வு எழுதுபவர்களுக்குக் கன்னடம், தெலுங்கு, மலையாளம், மராத்தி, உருது, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுத வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால், தமிழில் மட்டும் எழுத அனுமதியில்லை.

காவிரிப் பேச்சு முடிந்த பின்னர் மாண்புமிகு தமிழக முதல்வர் உருது, மராத்தி, மலையாளம் போன்ற பிற

மொழிகளில் நுழைவுத்தேர்வு எழுத மாணவர்களை அனுமதிக்கும் கருநாடக அரசு, தமிழ் மொழியிலும் தேர்வு எழுத அனுமதியளிக்க வேண்டும் எனக்கோரினார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கருநாடக முதல்வர் மாண்புமிகு திரு. ஜே.எச். படேல், இனித் தமிழிலும் நுழைவுத் தேர்வு எழுத அனுமதிக்கப்படும் என்று தெரிவித்தார்.

**பணிப்பிரிவு**

*21. கருவூலத்தில் தமிழ்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் பட்டிகள் கீழ்க்கண்டவாறு அமையலாமெனத் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

1. கருவூல விதி எண். 16, துணை விதி 2 (ஆ)-ல் குறிப்பிட்டுள்ளவாறு பட்டி தயாரிக்கத் தேவைப்படும் படிவம் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழியிலும் இருக்கலாம்.

2. ஒரு பட்டியையோ (Bill) அல்லது கைச்சாத்தையோ (Voucher) தமிழில் தயாரிக்கலாம். அப்படித் தயாரிக்கப்பட்ட பட்டியில்,

அ. பணம் பெறுபவர் பெயர்

ஆ. கோரப்படும் தொகை

இ. எந்த இனத்தின் கீழ்க் கோரப்படுகிறது

என்ற மூன்றையும் மட்டும் ஆங்கிலத்தில் குறிப்பிடல் வேண்டும். அதில் பட்டியைப் பணமாக்கும் அலுவலர் மேலொப்பம் இடவேண்டும்.

வருங்காலங்களில் ஏற்புக்காக அனுப்பப்படும் பட்டிகள்மேற்காணும் தெளிவுரைப்படி இருப்பின் அவற்றை உடனடியாகத் தேர்வு செய்து அனுப்பு மாறும், எவ்விதக் காரணத்தைக் கொண்டும் கால தாமதம் செய்தல் கூடாது என்றும் அனைத்துக் கருவூல அலுவலர்கள், சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

**பணிப்பிரிவு**

*22. கலை பண்பாட்டுத் துறை*

**13.5.1996க்கு முன்**

கலை பண்பாட்டுத் துறையில் தேர்வாணையத்தின் மூலமாக 22.7.2000 அன்று இளநிலை உதவியாளர்- மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் 20 பேர் பணி யமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். இதில் அரசு இசைப் பள்ளிகள், கலை - பண்பாடு மண்டல உதவி இயக்குநர் அலுவலகங்கள், அரசு இசைக் கல்லூரிகள், சிற்பக் கல்லூரி, கலை - பண்பாடு இயக்ககம் ஆகியவை பயன் பெற்றுள்ளன.

**பணிப்பிரிவு**

*23. கலைச்சொல் அகராதி*

**13.5.1996க்கு முன்**

தமிழ்நாடு இலங்கை, சிங்கப்பூர் மலேசிய நாட்டு அறிஞர்களைக் கொண்டு கலைச் சொல்லகராதி அனைத்துத் துறைகளுக்கும் தயாரிக்கும் பணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்று வருகிறது.

சிங்கப்பூர் இளைய மாநாட்டில் தகவல் தொழில் நுட்பவியல் அகராதி வெளியிடப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*24. கலைக்களஞ்சியம்*

**13.5.1996க்கு முன்**

பல கலைக்களஞ்சியங்கள் வெளிவந்துள்ளன.

**இந்த ஆட்சியில்**

நாடகக் கலைக்களஞ்சியம் - தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக ஒரு தொகுப்பும், தமிழிசைக் கலைக் களஞ்சியம் - பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் வாயிலாக மூன்று தொகுப்புகளும், மருத்துவக் கலைக் களஞ்சியம் - தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் எட்டுத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. மேலும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பட்ட குழந்தைகள் கலைக் களஞ்சியம் நூல் அப்படியே மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்கெனத் தமிழக அரசு உரூ.10 இலட்சம் ஒதுக்கியது. இப்போதுள்ள வளர்ச்சி நிலைக்கேற்பத் தேவையானதிருத்தங்களைச் செய்து, பின்னிணைப்பில் சேர்த்துக் கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

24.12.98 அன்று நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் உரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட வாழ்வியற் களஞ்சியம் 14, 15ஆம் தொகுதிகளும் அறிவியற் களஞ்சியம் 10-ஆவது தொகுதியும் வெளியிடப்படவுள்ளன.

திருக்குறள் கலைக்களஞ்சியம் வெளியிட அரசு ரூ. 3/- இலட்சம் ஒதுக்கியுள்ளது.

**பணிப்பிரிவு**

*25. கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சி*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

சிறந்த முறையில் இசை நாட்டிய நிகழ்ச்சிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடத்திச் சிறப்பு பெற்ற "திருச்சி, கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரிக்குத் தனி நேர்வாகக் கருதி மாண்புமிகு முதல்வர்

கலைஞர் அவர்கள் அதனை அரசு உதவிபெறும் கல்லூரியாக ஏற்றுக்கொண்டார்கள். அதன்படி, 16 ஆசிரியர்களுக்கும் 9 அலுவலர்களுக்கும் பல்கலைக் கழக மானியக் குழு வழங்கும் ஊதியத்தை வழங்குவ தற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அரசு ஆணை யிட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*26. கலைத்தொழில் கல்லூரி*

**13.5.1996க்கு முன்**

சென்னையிலும் குடந்தையிலும் இக்கல்லூரிகள் இயங்கி வருகின்றன. சென்னைக் கல்லூரி 100 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. எனினும், இக்கல்லூரிகளில் இளங்கலை அளவில் தான் வகுப்புகள் இருந்து வந்தன.

**இந்த ஆட்சியில்**

நூறு ஆண்டுகட்கு மேல் சிறந்து விளங்கும் சென்னைக் கலைத் தொழில் கல்லூரியில் முதன் முறையாக முதுகலை வகுப்பு (வண்ணக்கலை) தொடங்கப்பட் டுள்ளது. மேலும் காட்சிவழித் தகவல் தொடர்புக் கலை யில் முதுகலை வகுப்பும் தொடங்கப் பெற்றது. குடந் தைக் கல்லூரியிலும் வண்ணக்கலையில் முதுகலை வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளின் வரலாற்றில் முதுகலை வகுப்புகளை எட்டியுள்ளது இந்தக் காலத்தில்தான்.

**பணிப்பிரிவு**

*27. குறள் பரிசு*

**இந்த ஆட்சியில்**

கன்னியாகுமரியில் நடைபெற்ற அய்யன் திருவள்ளு வர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில் திருக்குறள் முற்றோதல் செய்த மாணவச் செல்வங்கள் 23 பேருக் குத் திங்கள் தோறும் உரூ. 1000/- வீதம் அவர்கள் வாழும் காலம் வரையில் பரிசு வழங்க மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன் படி 23 சிறார்களுக்குத் திங்கள் தோறும் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**பணிப்பிரிவு**

*28. சவகர் சிறுவர் இல்லம்*

**13.5.1996க்கு முன்**

சென்னை, புதுக்கோட்டை, மதுரையில் மட்டும் இருந்தன.

**இந்த ஆட்சியில்**

29 மாவட்டங்களிலும் கூடுதலாக 2, 3 இடங்களில் விரிவாக்க மையங்களாகவும் தற்போது சவகர் சிறுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. தேர்தெடுக்கப் பட்ட இரு கலைஞர்கள் மங்கோலியா வரை சென்று, பாராட்டுப் பெற்று வந்தனர். இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் மட்டும்தான் இந்த மன்றங்கள் முழுமையாக அமைக்கப்பட்டு, சிறப்புடன்செயற்பட்டு வருகின்றன.

**பணிப்பிரிவு**

*29. சீர்காழி மூவர் தமிழிசை மன்றம்*

**இந்த ஆட்சியில்**

"கி. பி. 17-ஆம் நூற்றாண்டிலும், 18-ஆம் நூற்றாண் டிலும் சீர்காழியில் வாழ்ந்த இசை மேதைகளான முத் துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகிய மூவரும் தமிழில் கீர்த்தனைகளை இயற்றித் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளனர். சீர்காழி யில் இவர்களுடைய சிலைகள் அமைந்த மணிமண்ட பம் ஒன்று நிறுவப்படும். ஆண்டுதோறும் அங்கே மாபெறும் தமிழிசை விழா நடைபெற ஏற்பாடு செய் யப்படும்" என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

அதற்கான இடத்தைத் தேர்வு செய்வதில் காலச் சுணக்கம் ஏற்பட்டதால், சீர்காழியில் கால்நடை பரா மரிப்புத்துறை தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து 0.44 ஏக்கர் நிலத்தை இந்த மணி மண்டபத்திற்காக

வழங்கியுள்ளது. அதற்கான ஆணை பிறக்கப்பட்டுள் ளது. (அரசாணை எண். 222, த. வ. ப. அ. நி. துறை, நாள்: 13. 7. 2000) வரைபடங்களுடன் கூடிய மதிப் பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும். அரசு இதற் கென ரூ. 30/- இலட்சம் வழங்கியுள்ளது.

**பணிப்பிரிவு**

*30. செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி*

**13.5.1996க்கு முன்**

1974 முதல் 1996 வரை 22 ஆண்டுகளில் 2 தொகுப் புகள் வெளிவந்துள்ளன.

**இந்த ஆட்சியில்**

நான்கு ஆண்டுகளில் 3 தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கணினி வசதி செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*31. செம்மொழி*

**13.5.1996க்கு முன்**

இந்த ஆட்சியில்

இந்தியாவின் செம்மொழிகளில் தமிழும் ஒன்று என அறிவிக்க வேண்டி, நடுவண் அரசுக்கு மடல்கள் எழு தப்பட்டுள்ளன. எனினும், அதற்கான விடைகள் எவை யும் வரப்பெறவில்லை.

**பணிப்பிரிவு**

*32. சென்னை – பெயர் மாற்றம்*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை என்ற பெயர் எல்லா மொழிகளிலும் அவ்வாறே வழங்கப்

படவேண்டும் என்று செய்த அறிவிப்பு பற்றிப் பெங்க ளூரில் உள்ள மைய அரசு நில அளவைத் துறையின் (தெற்கு மண்டலம்) குறிப்புரை 12.8.96இல் கோரப் பட்டது. இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலேயே சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. நடுவண் அரசின் ஒப்புதல் பெற்று இன்று எல்லா இடங்களி லும் சென்னை எனும் பெயர் ஆங்கிலத்திலும் பிற மொழி களிலும் வழங்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*33. தட்டச்சுப் பொறிகள்*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

1. ஆட்சிமொழித்திட்ட விதிமுறைகளின்படித் தலை மைச் செயலகத்தில் 65ரூ தமிழ்த் தட்டச்சுகள் இருக்க வேண்டும். செயலகத் துறைகளுக்கு வழங்குவதற் காக 500 தமிழ்த் தட்டச்சுக்களைப் புதிதாக வாங்கிட உரூ.50 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டது. புதிய தமிழ்த் தட்டச்சுக்கள் வாங்கப்பட்டுத் தலைமைச் செய லகத்துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2. மேலும் உரூ.40 இலட்சம் ஒதுக்கப்பட்டு 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டுள்ளன. இவை துறைத்தலைமை அலுவலகங்கட்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கட்கும் வழங்கப்பட்டு வரு கின்றன.

3. தலைமைச் செயலகத்தில் எடுக்கப்பட்ட ஆங்கி லத் தட்டச்சுப் பொறிகளில் ஆங்கில விசைப் பலகை களைத் தமிழில் மாற்றிப் பயன்படுத்த உரூ. இலட் சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் நாம் பெற்ற புதிய தமிழ்த்தட்டச்சு - 1500.

**பணிப்பிரிவு**

34. *தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடம்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

பல மாநிலங்களில் மாநில சாகித்ய அகாதமிகள் செயற்பட்டு வருவதைப் போன்று தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவும், தமிழ் எழுத்தாளர்களை ஊக்கு விப்பதற்காகவும் 16.12.2000 அன்று சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர்தினவிழாவில் 'தமிழ் இலக் கியச் சங்கப் பலகையின் குறள்பீடம்' மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணா நிதி அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது. 7.3.2000 நாளிட்ட, தமிழ் வளர்ச்சி, பண்பாடு - அறநிலையத் துறை அரசாணை (டி1) எண் 37 இல், தமிழ் இலக் கியச் சங்கப் பலகைக் குறள் பீடத்தின் பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அமர்த்தப் பெற்று ஆணையிடப்பெற்றது.

தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடம், தற் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சிறந்த படைப்பிலக்கியச் செம்மல் ஒருவர்க்கு அவா தம் ஒட்டுமொத்த வாழ்நாள் சாதனைக்காக குறள் பீட விருதாக ரூபாய் இரண்டு இலட்சம் வழங்குதல்.

தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவும்படியாக கவிதை, அறிவியல், நாட்டுப்புறவியல், மொழி பெயர்ப்பு, திறனாய்வு ஆகிய 5 துறைகளில் சிறந்த நூல்கள் படைத்தும், தொண்டாற்றியும் வரும் ஐவ ருக்கு இந்த ஆண்டு குறள்பீடப் பரிசாக தலா ரூ. 25,000/- வழங்குதல்.

தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவும்படி யான சிறந்த நூல்கள் படைத்த 30 வயதுக்குட்பட்ட

இளம் எழுத்தாளர்கள் 10 பேருக்கு, பாராட்டுத் தொகை ரூ. 5000/-த்துடன் குறள்பீடப் பாராட்டிதழ் வழங்குதல்.

தமிழ் நீங்கலாக 21 இந்திய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பதினாறு தமிழ்ச் சிறுகதைகளின் மொழிப் பெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது.

ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுவதற் காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரண்டு தமிழ்ப் புதி னங்களின் மொழிபெயர்ப்புப் பணி நடை பெற்று வரு கிறது.

தொல்காப்பியம் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது.

குழந்தைப் பாடல்கள் தொகுப்பு நூல் தயாரித்து வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது.

நலிந்த நிலையிலுள்ள எழுத்தாளர்களின் பிள்ளை களுக்குப் படிப்புதவி வழங்குதல், நாட்டுப்புற இலக் கியங்களைத் தொகுத்து ஒலிப்பேழைகளில் பதித்து வெளியிடுதல் ஆகிய திட்டங்களுக்காக தனிக்குழுக் கள் அமைக்கப்பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

22.9.2000 அன்று திண்டுக்கல்லில், மாவட்ட இலக் கியக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது.

30.10.2000 முதல் 5.11.2000 வரையில், சென்னை யில் மொழிபெயர்ப்புப் பலிலரங்க வகுப்புகள் நடத் தப்பெற்றன. இப்பயிற்சி வகுப்பகளில் 25 பேர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

16.11.2000 முதல் 19.11.2000 வரையில் திருச்சி ராப்பள்ளியில் இளம் எழுத்தாளர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன. 900க்கு மேற்பட்டவர்

கள் மனுச் செய்திருந்தனர். இதில் தேர்ந்தெடுக்கப் பட்ட 76 எழுத்தாளர்கள் பங்கேற்று பயிற்சி பெற்றுள் ளனர்.

தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் திட்டச் செல வினங்களுக்கு 2000-2001 நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பெற்றுள்ளது.

**பணிப்பிரிவு**

*35. தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

எம். சீனிவாசராவ் என்பவர் 1919ஆம் ஆண்டில் தமிழ்ச் சுருக்கெழுத்துக் கலைக்கு வித்திட்டார். அந்த முறை யைப் பின்பற்றி அனந்தநாராயணன் என்பவர் தமிழ்ச் சுருக்கெழுத்துநூலை வெளியிட்டார்.

இதன் மூன்றாம் பதிப்பு 1988இல் வெளியிடப் பெற் றது. இந்நூலின் தேவையைக் கருத்திற் கொண்டு அரசு நிதி ஒதுக்கி நான்காம் பதிப்பினை வெளிக் கொணர்ந்துள்ளது. 24.12.98 அன்று இந்நூல் வெளி யிடப்பட்டது. 5000 படிகள் அச்சிடப்பெற்று விற்பனை செய்யப்படுகின்றன. 1988இல் மூன்றாம் பதிப்பின் விலை உ.ரூ.35/- தற்போது நான்காம் பதிப்பின் விலை உ.ரூ.32/- மட்டுமே.

**பணிப்பிரிவு**

*36. தமிழ்ப் பல்கலைக் கழகம்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

1998இல் முதல் பட்டமளிப்பு விழாவை நடத்தி ஒரு வருக்கு முதுமுனைவர் பட்டமும், 20 பேருக்கு முனை வர் (Ph.D.,) பட்டமும், 80 பேருக்கு ஆய்வு நிறைஞர்

(M.Phil.,) பட்டமும் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் பணி மதிப்பீடு செய்யப்பட்டு அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

தொகுப்பூதியப் பணியாளர்கள் 50 பேர் ஊதிய நிரக்குக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் ரூ. 113 இலட்சம் வழங்கப்பட்ட மாநில நிதி உதவியை கலைஞர் அரசு ரூ. 354 இலட்சமாக உயர்த்திக் கொடுத்தது. இதனால் நிதி நெருக்கடி அறவே தவிர்க்கப்பட்டு பல்கலைக் கழகம் சீராகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

**பணிப்பிரிவு**

*37. தமிழ் வளர்ச்சித் துறைக்கு அலுவலர்கள்*

**13.5.1996க்கு முன்**

3 உதவி இயக்குநர்கள், 8 தமிழ் ஆய்வு அலுவலர்கள், சில இடங்களில் மட்டும் உதவியாளர்கள், தட்டச்சர்கள் - 29 மாவட்டங்கட்கு இவ்வளவு பேர்தான் பணியாற்றினர். ஒருவரே நான்கு மாவட்டத்தைக் கவனிக்க வேண்டிய நிலை.

**இந்த ஆட்சியில்**

1. தமிழ் ஆய்வு அலுவலர்கள் அனைவரும் பணிவரன்முறை செய்யப்பட்டு உதவி இயக்குநர்களாயினர். அவர்கள் தொடுத்த வழக்கு திரும்பப் பெறப்பட்டது.

2. இயக்குநர் அலுவலகத்தில் உள்ள தகுதியுடைய கண்காணிப்பாளர்களில் மூவர் பதவி உயர்வு பெற்று உதவி இயக்குநர்களாயினர். அவர்கள் தொடுத்த வழக்கும் திரும்பப் பெறப்பட்டது. மேலும் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள இத்துறை உதவியாளர்கள் இருவர் உதவி இயக்குநர்களாக அமர்த்தப் பெற்றுள்ளனர்.

3. தமிழில் முனைவர் பட்டம் பெற்றவர்கள் பட்டியல் வேலை வாய்ப்பகம் மூலம் பெறப்பட்டு முறையான நேர்காணல் வழி 13 பேர் உதவி இயக்குநர்களாக அமர்த்தப்பட்டனர்.

4. 1998-99 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உதவி இயக்குநர், உதவியாளர், இளநிலை உதவியாளர்-தட்டச்சர், அலுவலக உதவியாளர் ஆகியோர் பணியாற்றும் வகையில் அரசு புதிய பணியிடங்களை ஒப்பளிப்புச் செய்தும் சீராக்கம் செய்தும் ஆணையிட்டுள்ளது. இதனால் அனைத்து மாவட்டத் தமிழ் வளர்ச்சித்துறை அலுவலகங்களும் சீர்மையும் முழுமையும் பெற்றுச் செயற்படுகின்றன. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் இணை இயக்குநர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அன்றியும் சேலம், திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு இரு மண்டலத் தமிழ் வளர்ச்சித்துணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அலுவலர்கள் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகின்றனர்.

**பணிப்பிரிவு**

*38. தமிழ் வளர்ச்சி வளாகம்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

உரூ.2 கோடி செலவில் அருங்காட்சியகப் பகுதியில் தமிழ் வளர்ச்சி வளாகம் ஒன்று உருவாகின்றது. இதில் தமிழ் வளர்ச்சி இயக்ககம், தொல்பொருள் ஆய்வுத் துறை ஓலைச்சுவடி நூலகம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் அமையுமாறு, இதனைப் பார்வையிடவரும் உள்நாட்டாரும், வெளிநாட்டாரும் ஒரே இடத்தில் தமிழ் தொடர்பான விளக்கங்களைப் பெறும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*39. தமிழில் அகவி* (Pager)

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

சென்னையில் உள்ள ஆர்பிஜி (RPG) அகவி நிறுவனமும், உலக அமைப்பான மோட்டோராலவும் சேர்ந்து தமிழில் அகவி எனும் தகவல் அறிவிப்புக் கருவியை உருவாக்கியுள்ளன. உசா மார்ட்டின் நிறுவனமும் தமிழ் அகவியை வெளியிட்டுள்ளது. கோவையில் மட்டும் இதனை 3,000 பேர் வாங்கியுள்ளனர்.

**பணிப்பிரிவு**

*40. தமிழில் அறிவியல் நூல்கள்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

வருங்காலத்தில் பொறியியல் கல்வியைத் தமிழில் பயிலவும், வேறு வகையான பயன்பாட்டிற்கும் அறிவியல் நூல்களைத் தமிழில் கொண்டு வரும் முயற்சியை அரசு மேற்கொண்டது. 15 பல்கலைக்கழகங்களுக்கு உரூ.64 இலட்சம் பிரித்து வழங்கப்பட்டு, அதனடிப்படையில் இன்று அனைத்து நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

**பணிப்பிரிவு**

*41. தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்*

**13.5.1996க்கு முன்**

ஆண்டுதோறும் வெளியிடப்பெறும் நூல்களில் சிறந்த நூல்களைத் தெரிவுசெய்து முதற்பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசுகள் முறையே உரூ.5,000, உரூ.3000, உரூ.1000 என வழங்கப்பட்டு வந்தன. பதிப்பகத்தாருக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

**இந்த ஆட்சியில்**

'தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் அழகு காப்பாய்! இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற் பணியாம்' என்னும் பாவேந்தரின் முழக்கத்தை அரசு தலைமேற் கொண்டு, தமிழுக்கு அழகூட்டும் நன் முயற்சியின் விளைவாக உருவாக்கப் பெற்றதே இவ் வருந்திட்டம். எண்ணற்ற நூல்கள் வெளிவருகின்றன. கால நீரோட்டத்தை எதிர்த்துப் பயன்தரத்தக்கனவாகத் திட்பமும் நுட்பமும் நிறைந்தனவாக உள்ளன சிலவே. அத்தகைய நூல்கள் வெளிவருதலின் இன்றியமை யாமையை உணர்ந்தே, கதை புனைவோரை- காவியம் படைப்போரை- கட்டுரையாளர்களை- ஆய்வு முனை வோரை ஊக்குவித்தற்குத் தமிழக அரசு ஆண்டு தோறும் பரிசு வழங்கிப் பாராட்டி வருகிறது.

தரம் மிகுந்த நூல்களைத் தமிழில் வெளியிட்டு உத வும் தகுதி மிக்காரையும் நெஞ்சார வாழ்த்த வேண்டும் என்ற கடமை உணர்ச்சி மேலீட்டால், பதிப்பகத்தா ருக்கும் பாராட்டிதழ் வழங்கிச்சிறப்பித்து வருகிறது.

இத்திட்டம் முதன்முதலில் 1947இல் தொடங்கப் பெற்றது. 1960 வரை தமிழ் வளர்ச்சிக் கழகத்தினால் செயற்படுத்தப்பட்டது. 1961 முதல் தமிழக அரசினால் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப் பெறுகிறது.

முதற்பரிசு உரூ.5,000 ஆகவும், இரண்டாம் பரிசு உரூ.3,000 ஆகவும் மூன்றாம் பரிசு உரூ.1,000 ஆகவும் வழங்கப்பட்டு வந்த பரிசுத்தொகை 1997 முதல் முதற்பரிசு உரூ.10,000/- இரண்டாம் பரிசு உரூ.5,000/-, மூன்றாம் பரிசு உரூ. 2,000/- என உயர்த்தி வழங்கப்படுகிறது. 1997இல் வெளியிடப் பெற்ற நூல்களுக்கு மொத்தமுள்ள 15 தலைப்பு களில் 40 நூல்களின் 41 நூலாசிரியர்களுக்கு, உரூ. 2,44,000/- பரிசுத் தொகையாக 16.1.1999ஆம் நாள்

நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப் பெற்றுள்ளது. தற்போது பரிசுபெறும் நூல்களைப் பதிப்பித்துள்ள 42 பதிப்பகத்தாருக்கும் ரூ. 84000/- பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

**பணிப்பிரிவு**

*42. தமிழில் மருத்துவம்*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

மருந்துச் சீட்டுகள் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு வெளியிடும் மாத்திரைகளுக்கான உறைகளில் தமிழ் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**பணிப்பிரிவு**

*43. தமிழில் வழிபாடு*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

தமிழில் வழிபாடு என்பதை நாடெங்கிலும் தெளிவுபடுத்தி முறையான அறிஞர் குழு - உயர் மட்டக் குழுவின் இசைவு - சிவாச்சாரியார், பட்டாச்சாரியார், ஓதுவார்கள் முன்னிலையில் அரங்கேற்றம் - ஆதீன கர்த்தர்கள் வழங்கிய திருத்தங்கள் ஏற்பு எனும் நிலையில் இன்று சிவபெருமான், நடராசர், தென்முகக் கடவுள், உமையம்மை, விநாயகர், முருகவேள், திருமால், தாயார், கோதண்டராமர், அனுமன், மாரியம் மன், காளியம்மன், துர்க்கையம்மன் போற்றிகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நவகோள்கள் போற்றி நூலும் வெளியிடப்பட்டுள்ளது. 'விநாயகர் 1008 போற்றிகள்' தற்போது வெளியிடப்படுகிறது.

**பணிப்பிரிவு**

*44. தமிழில் வேள்வி*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

வேள்வி என்பது ஆகம விதிகளுக்கு உட்பட்டது என்றும், அதனை யாகம் எனும் பெயரால் வடமொழியில் நடத்துவதே முறை என்றும் சிலர் விடாப்பிடியாக வலியுறுத்தி வந்தனர்.

ஆனால், அந்த நிலை உண்மையன்று. ஆகம விதிகளுக்கு மாறுபடாமல் தமிழில் சிவ வேள்வியை நடத்திட முடியும் என்றும், அதனைக் கோவை மாவட்டத்தில் சாந்தலிங்க அடிகளார் போன்றவர்கள் நடத்திக் காட்டியுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதன்படி மயிலை - கபாலீசுவரர் கோயிலில் 21.6.98 அன்று சிவ வேள்வி நடைபெற்றது. பலரும் வரவேற்றனர். இதனைச் சிவாச்சாரியார்களே முன்னின்று செய்தனர்.

இதனைத் தடுத்திடச் சிலர் முயன்றாலும் அவர்கள் பின்னர் பின்வாங்கிக் கொண்டனர். அவர்களும் கலந்து கொண்டு பாராட்டினர்.

**பணிப்பிரிவு**

*45. தருமபுரிப் பகுதிகளில் தமிழ்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

தருமபுரி மாவட்டத்தில் ஓசூர், தளி, கெலமங்களம், தேன்கனிக் கோட்டை ஆகிய பகுதிகளில் தெலுங்கும், ஆங்கிலமும் மட்டுமே பயிற்றுவிக்கப்படும் பள்ளிகளில் மாணவர்களின் விருப்பத்தை நேரிடையாகக் கேட்டறிந்து அவர்களுக்குத் தமிழ் சொல்லிக்

கொடுக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தமிழகத்திலுள்ள சிறுபான்மையர் மொழிகளைக் கொண்ட 1008 பள்ளிகளிலும் தமிழாசிரியர்கள் அமர்த்தப் படுவார்களேயானால் தமிழ் படிக்காமலேயே தமிழ் நாட்டில் பட்டம் பெறக்கூடிய நிலை எவருக்கும் இராது. இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**பணிப்பிரிவு**

*46. தலைமைச் செயலகத் துறைகளில் ஆய்வு*

**இந்த ஆட்சியில்**

தமிழக அரசின் தலைமைச் செயலகத் துறைகள் அனைத்திலும் ஆட்சிமொழித் திட்ட மேம்பாட்டை ஆய்வு செய்யத் திட்டமிடப்பட்டு, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் தலைமையில் ஆய்வுப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டன. தலைமைச் செயலகத்துறைகள் அனைத்திலும் ஒரு சுற்று ஆய்வு முடிக்கப்பட்டு, இரண்டாம் சுற்று ஆய்வு நடை பெற்று வருகிறது. இந்த ஆய்வுகளில் அரசாணைகள் தமிழில் வெளிவரவும், பிற பணிகள் அனைத்தும் தமிழில் நடைபெறவும் வலியுறுத்தப்படுகிறது. முதலில் 50% அளவில் இருந்த ஆட்சி மொழிச் செயலாக்கம், தற்போது 80% அளவில் முன்னேறியுள்ளது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

**பணிப்பிரிவு**

*47. திராவிடப் பல்கலைக்கழகம்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

ஒரு காலத்தில் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் ஆய்வு நூலைத் தந்தார். தமிழின் தாய்மைத் தன்மையைப் பின்வந்த பாவாணர் போன்ற ஆய்வாளர்களும் உறுதி செய்தனர். இந்

நிலையில் தென்னக மொழிகளையும், அவற்றிடையே உள்ள உறவுகளையும், ஊடாடி நிற்கும் பண்பாட்டுக் கூறுகளையும் உறுதி செய்யும் வகையில் மாண்பு மிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்களின் முயற்சியில் 'குப்பம்' எனும் நகரில் "திராவிடப் பல்கலைக்கழகம்" தொடங்கப்பட்டது. இது குறித்த மடல் வந்ததும் உடனே உரூ.50 இலட்சம் நன்கொடையாக வழங்கியவர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். கேரள மாநிலம் உரூ. 25 இலட்சம் வழங்கியுள்ளது.

இந்நிலையில் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் வ. அய். சுப்பிரமணியம் திராவிடப் பல்கலைக்கழக இணைவேந்தராக அமர்த்தப்பட்டுள்ளார்.

இரண்டாம் தலைமையாக, தமிழக அரசு ரூ. 25/- இலட்சம் வழங்கியுள்ளது. வள்ளுவம் மண்டபம் ரூ. 1.25 கோடியில் எழுப்பப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*48. துணையகராதி*

**13.5.1996க்கு முன்**

78 துறைகளுக்கான சிறப்புச் சொல் துணையகராதிகள் இருந்தன.

**இந்த ஆட்சியில்**

1972 முதல் புதுப்பிக்கப்படாத அகராதிகளில் துறையின் புதிய சொற்கள் சேர்க்கப்பட்டு முதலில் 10 துறைகளுக்குரிய சிறப்புச் சொல் துணை அகராதிகளைப் புதுப்பித்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை மட்டுமன்றி மற்ற சிறப்புச்சொல் துணை அகராதிகள் அனைத்தையும், அரசுப் பணியாளர்களுக்குப் பெரிதும் துணைபுரிந்து வரும் ஆட்சிச் சொல்

லகராதியையும் புதுப்பித்து வெளியிடத் திட்டமிடப் பட்டு, இப்பணிக்கென வல்லுநர் குழு அமைக்கப் பட்டது. இவ்வகராதிகளைப் புதுபிக்கும் பணிகள் இப் போது நடைபெற்று வருகின்றன. இருப்பினும் அரசு அலுவலகங்களில் இவற்றின் உடனடித் தேவை யினைக் கருத்திற்கொண்டு இப்போதுள்ள ஆட்சிச் சொல் அகராதியை 20,000 படிகளும், சிறப்புச் சொல் துணை அகராதிகளை இணைத்து ஒரே தொகுப்பாக 10,000 படிகளும் அச்சிட்டு வழங்க வழிவகை செய் யப்பட்டுப் பணிகள்நடைபெற்று வருகின்றன.

**பணிப்பிரிவு**

*49. தென்னகப் பண்பாட்டுமையம்*

**13. 5. 1996 –க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

தஞ்சாவூரில் தென்னகப் பண்பாட்டு மையம் அமைப் பதற்காக 25 ஏக்கர் நிலம் அரசினால் ஒதுக்கப்பட்ட துடன், கட்டுமானப் பணிகளுக்காகவும் கலையரங் கம் முதலியவை அமைப்பதற்காகவும் ரூ. 2 கோடி தமிழக அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*50. தொடர் வண்டி*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

தமிழக அரசு எடுத்த முயற்சியின் வாயிலாக நடு வணரசுக்கு உட்பட்ட தொடர் வண்டித்துறையில், திரு. அக்னிகோத்ரி என்பவர் உடனடியாகச் செயற் பட்டு, அனைத்துத் தொடர் வண்டிகளிலும் தமிழில் பெயர்ப் பலகைகளை வைத்துள்ளார். அதன்படிக் 'கம்பன் விரைவு வண்டி', 'மலைக்கோட்டை விரைவு வண்டி', 'வேகத் தொடர் வண்டி' முதலிய சொற்றொடர் களைத் தொடர்வண்டிகளில் இப்போது காணலாம்.

**பணிப்பிரிவு**

## 51. தொல்லியல் துறை

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

மரபுச் சின்னங்களைப் பாதுகாத்தல், அகழ் வைப் பகங்கள் அமைத்தல், பழம்பொருட்களைப் பதிவு செய்தல், கல்வெட்டுகளைப் படியெடுத்து நூல்களாக அச்சிட்டு வெளியிடுதல், கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்கு ஓலைச் சுவடிகள் சேகரித்தல், பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளைத் தொல்பொருள் ஆய்வுத்துறை மேற்கொள்கிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு அரிய தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அழகன்குளம், நாகப்பட்டினத்திலுள்ள பூம்புகார், பெரியார்மாவட்டம் கொடுமணல் ஆகிய இடங்களில் பெரிய அளவில் அகழாய்வு மேற்கொள்ளப் பட்டது. திருக்கோயிலூர் கோவலன் பொட்டல் கரூர் போன்ற இன்னும் பல்வேறு இடங்களிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகழாய்வுகள் தமிழகத்தின் பண்டைக்காலத்துப் பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்துகின்றன. கி.மு.500 அளவிலேயே தமிழர்கள் கல்வியறிவு நிரம்பியவர்களாகத் திகழ்ந்தனர் என்பதும், பொருளாதாரத்தில் சிறந்து வட இந்தியாவோடும் கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளோடும் வணிகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதும் தெளிவு.

மறைந்த பூம்புகார் நகரின் சில கட்டடப் பகுதிகளும், இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பாகக் கடலில் மூழ்கிப் போன ஐரோப்பிய நாட்டைச் சார்ந்த கப்பலும் பூம்புகார் ஆழ்கடலாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூம்புகாரில் நிலம் மற்றும் நீர் அகழாய்வு

மூலம் சேகரிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு ஆழ்கடல் தொல்லியல் அகழ் வைப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. படி எடுக்கப்பட்ட 10,000 கல்வெட்டுகளை அச்சில் கொணர உரூ. 8.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பணிப்பிரிவு

*52. தேர்வாணையம்*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

இரண்டுமுறை அமைச்சரே தேர்வாணையம் சென்று தேர்வாணையத் தலைவருடனும் உறுப்பினர்களிடமும் பேசியுள்ளார்.

1. வினாத்தாள்கள் அனைத்தும் தமிழில் முதலிலும் ஆங்கிலத்தில் அடுத்தும் அமைய ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

2. அரசுப்பணியாளர் அனைவருக்கும் 'ஆட்சித்தமிழ்' பற்றிய ஒரு பாடத்தைக் கட்டாயமாக்குதல் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நூலில் தேர்வு எழுதி வெற்றி பெறுபவர்கள் மட்டுமே தகுதி காண் பருவத்தை நிறைவு செய்யமுடியும்.

**பணிப்பிரிவு**

*53. நாட்டுடைமை*

**13.5.1996க்கு முன்**

1. விடுதலைக்கவி பாரதியாரின் பாடல்கள்
2. சிலம்புச்செல்வர்- ம.பொ.சி. அவர்களின்விடுதலைப் போரில் தமிழகம். உரூ.1.00 இலட்சம், 1984.
3. பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் படைப்புகள், உரூ.10.00 இலட்சம், 1990.

4. அறிஞர் அண்ணா அவர்களின் படைப்புகள் உரூ.75.00 இலட்சம், 1995.

5. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் அவர்களின் பாடல்கள், படைப்புகள் உரூ.10.00 இலட்சம், 1995.

**இந்த ஆட்சியில்**

தேவநேயப் பாவாணர் நூல்களுக்காக உரூ.20 இலட்சமும், மறைமலையடிகள் நூல்களுக்காக உரூ.30 இலட்சமும், திரு.வி.க. நூல்களுக்காக உரூ.20 இலட்சமும், கல்கி நூல்களுக்காக உரூ.20 இலட்சமும் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டு அனைவரது நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

சுதந்திரப் பொன்விழாவையொட்டி விடுதலை உணர்வூட்டி நூல்கள் எழுதிய மறைந்த தேசியத் தமிழ் எழுத்தாளர்கள் 15 பேரின் நூல்களை நாட்டுடைமையாக்கி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்ட மன்றத்தில் அறிவித்தார் அவர்களின் பெயர்கள் வருமாறு:

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,
2. ப. ஜீவானந்தம்,
3. நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை,
4. மூதறிஞர் இராஜாஜி,
5. வ.உ. சிதம்பரனார்,
6. சுத்தானந்த பாரதியார்,
7. அகிலன்,
8. ஏ.எஸ்.கே. அய்யங்கார்,
9. வ.ரா.,
10. நாவலர் சோமசுந்தர பாரதியார்,
11. கா.மு. ஷெரீப்,
12. பரலி சு. நெல்லையப்பர்,
13. வ.வே.சு. அய்யர்,
14. காரைக்குடி சா. கணேசன்,
15. ச.து.சு. யோகி.

இவர்களில் இராஜாஜி மற்றும் அகிலன் குடும்பத்தினர் நாட்டுடைமையாக்கப்படுவதை ஏற்காத காரணத்தால் எஞ்சிய 13 பேருக்கு ஒவ்வொருவருக்கும் உரூபாய் ஐந்து இலட்சம் வீதம் உரூ.65 இலட்சம் தமிழக அரசு வழங்கியுள்ளது.

திரு. வெ. சாமிநாத சர்மா நூல்களுக்காக உரூ. 5. இலட்சமும், கவிஞர் முடியரசன் நூல்களுக்காக உரூ. 10 இலட்சமும், திரு. மயிலை சீனி. வேங்கட சாமி நூல்களுக்காக உரூ. 10 இலட்சமும், திரு. சாமி. சிதம்பரனார் நூல்களுக்காக உரூ. 10. இலட்சமும் பன்மொழிப்புலவர் அப்பாத்துரையாரின் நூல்களுக்காக உரூ. 10 இலட்சமும் பரிவுத்தொகையாக வழங்கப்பட்டு இவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

**பணிப்பிரிவு2**

*54. நாளிதழ்கள் - இதழ்களுக்குப் பரிசு*

**இந்த ஆட்சியில்**
**இதழ்களுக்குப் பரிசு**

நாளிதழ்கள், கிழமை இதழ்கள், மாத இதழ்கள் போன்றவை ஆற்றல்மிக்க செய்தி வாயிலாக (Mass Media) அமைந்துள்ளன. இவ்வாறான இதழ்களில் பரவலாக மொழிச் சீர்குலைவு பெருமளவுக்கு மலிந்துள்ள நிலை தொடர்ந்து வருகிறது. அவற்றைப் போக்கவும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் பயக்கத்தக்க வகையில் வெளிவரும் தமிழ் நாளிதழ்கள், வார இதழ்கள், இரு வார இதழ்கள், மாத இதழ்கள் போன்றவற்றிற்குப்பணப்பரிசுகள்வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| நாளிதழ்கள் - 3 பரிசுகள் | - உரூ. 50,000/- |
| | - உரூ. 30,000/- |
| | - உரூ. 20,000/- |

கிழமை இதழ்கள் - 3 பரிசுகள் - உரூ. 20,000/-
- உரூ. 15,000/-
- உரூ. 10,000/-

திங்கள் இதழ்கள் - 3 பரிசுகள் - உரூ. 20,000/-
- உரூ. 15,000/-
- உரூ. 10,000/-

இவ்வாண்டில் தமிழில் வெளிவரும் நாளிதழ்கள், இதழ்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் உருவாக்கப் பட்டது. நாளிதழ்களுக்கு முதல் பரிசு உரூ. 50,000/- இரண்டாம் பரிசு உரூ. 30,000/-, மூன்றாம் பரிசு உரூ. 20, 000/- கிழமை இதழ்களுக்கு முதற்பரிசு உரூ. 20,000/- இரண்டாம் பரிசு உரூ. 15,000/- மூன்றாம் பரிசு உரூ. 10,000-; திங்கள் இதழ் களுக்கு முதற்பரிசு உரூ. 20,000/-, இரண்டாம் பரிசு உரூ. 15,000-, மூன்றாம் பரிசு உரூ. 10,000/- எனப் பரிசுகள் வழங்கவும், பரிசு பெறுவோரைப் பாராட்ட வும் உரூ. 2.00 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டது. பரிசுக்குரிய இதழ்களைத் தெரிவு செய்யும் பணியை நீதியரசர் கோகுல கிருட்டிணன் தலைமையிலான குழு மேற்கொண்டு வருகிறது.

**பணிப்பிரிவு**

*55. நிதியுதவி*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

1. திரைப்பட உரையாடலாசிரியர் மறைந்த திரு. இளங்கோவன் குடும்பத்திற்கு உரூ.2.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

2. உ.வே.சா. நூலகத்தில் சிலையமைப்பில் பற்றாக் குறையாக இருந்த உரூ.50,000/- தமிழக அரசால் வழங்கப்பட்டது.

3. மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு உரூ.45 இலட்சம் வழங்கப்பட்டது.

4. திண்டுக்கல்லில் கலையரங்கம் அமைத்திடத் தமிழக அரசின் பங்காக உரூ.12 இலட்சம் ஒதுக் கப்பட்டுள்ளது.

5. தில்லித் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்காக உரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது.

6. பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் தமிழ்வழி நடத்தும் காமராசர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆண்டுக்கு உரூ. 10,000/- உதவி வழங்கப்படுகிறது.

7. மறைமலையடிகள் நூலகத்திற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த உரூ.10,000/- உயர்த்தப்பட்டு இப்போது ஆண்டு நல்கையாக உரூபாய் ஒரு இலட் சம் வழங்கப்படுகிறது.

8. கருநாடக மாநிலம் ஹூப்ளி தமிழ்ச் சங்கம் கரு நாடக உயர்நிலைப்பள்ளி கி.ஆ.பெ. விசுவநாதம் தமிழ் ஆரம்பப்பள்ளிக்கு உரூ.80,000/- வழங்கப் பட்டுள்ளது.

9. மும்பைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சங்கக் கட்டடத் தைப் புதுப்பிக்க உரூபாய் ஒரு இலட்சம் ஒப்பளிக் கப் பெற்றுள்ளது.

10. தென்மொழிகள் புத்தக நிறுவனம் கூரியர் இதழ் வெளியிட உரூ. 1 இலட்சம் நிதியுதவி அளிக்கப் படுகிறது.

11. தமிழில் தந்தி அனுப்பும் முறையைக் கண்டு பிடித்த புலவர் அ. சிவலிங்கனாரின் பணியைப் பாராட்டும் வகையில் அவருக்கு உரூ.50,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

12. சிறந்த தமிழறிஞர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களுடைய நினைவாக, தஞ்சாவூரில் அமைக்கப்பட்டுள்ள திருவருள் தமிழ்க் கல்லூரியின் கட்டிட நிதிக்காக, தமிழக அரசால் ரூ. 15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*56. நிரந்தரக் கண்காட்சி*

கேரள மாநிலத்தில் கேரள வரலாறு குறித்த 'சிற்ப அமைப்புக் கண்காட்சி' ஒலி, ஒளி அமைப்புடன் திகழ்கிறது. அதைப்போல் தமிழக வரலாற்று நிரந்தரக் கண் காட்சி அமைந்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரம் கடற்கரையோரம் 8 ஏக்கர் நிலம் முடிவானதும் தொடங்கும்.

காட்சிச் சிற்பங்கள் உருவாகி வருகின்றன.

**பணிப்பிரிவு**

*57. நினைவுச் சின்னங்கள்*

**13.5.1996க்கு முன்**

ஏற்கனவே ஒக்கூர் மாசாத்தியார், மாங்குடி மருதனார், கருவூர்க்கிழார், நல்லூர் நத்தத்தனார் போன்றவர்களுக்கு நினைவுத் தூண்கள் எழுப்பப்பட்டுள்ளன.

**இந்த ஆட்சியில்**

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்ற பாடல் வரியை உலகுக்குத் தந்த கணியன் பூங்குன்றனுக்காகச் சிவகங்கை மாவட்டம் மகிபாலன் பட்டியில் நினைவுத் தூண் எழுப்பப்பட்டு வருகிறது.

**பணிப்பிரிவு**

*58. நூல் உதவி*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

1. சமதக்கினி எனும் விடுதலைப் போராட்ட வீரர் காரல் மார்க்சின் 'மூலதனம்' நூலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அதனை வெளியிட அரசு உரூ. 5. இலட்சம் நிதியுதவி செய்துள்ளது.

2. திரு. ஐ. சண்முகநாதன் "ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு" எனும் நூலினை உருவாக்கி வருகிறார். அந்நூலினை வெளியிட அரசு ரூ. 3 இலட்சம் நிதியுதவி செய்துள்ளது.

3. திருக்குறளை மலையாள மொழியில் மொழி பெயர்த்து வெளியிடத் திரு. எஸ். ரமேசன் நாயர் அவர்களுக்கு உரூ. 2 இலட்சம் நிதியுதவியாக வழங்கப் பட்டது.

4. திரு. மணவை முஸ்தபா அவர்களுக்கு 'கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி' வெளியிட உரூ. 2 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டது.

3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு அ. சுவாமி ஞானப்பிரகாசரால் எழுதப்பட்ட சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி எனும் நூல் வெளியிட உரூ. 2 இலட்சமும்,

ஆ. மறைந்த வரலாற்றுப் பேராசிரியர் திரு. கே.கே. பிள்ளை அவர்களின் "தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்" எனும் நூலை வெளியிட உரூ. 77,800/-ம்

இ. அமரர் ஜே. பி. இராட்லர் அவர்களால் தொகுக்கப் பெற்ற தமிழ் - ஆங்கில அகராதியை மறுபதிப்பாக வெளியிட உரூ. 2 இலட்சமும்,

ஈ. இதுகாறும் வெளிவந்த "தமிழ் இலக்கிய வரலாறு" தமிழ்நாட்டு இலக்கியங்களை மட்டுமே சார்ந்து நிற்கும் நிலையை மாற்றி, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் இலக்கிய

வரலாறு களையும் ஒருங்கிணைத்துப் "புதிய தமிழ் இலக்கியவரலாற்றை' உருவாக்க உரூ.3 இலட்சமும்,

உ. கன்னியாகுமரியில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பெற்ற "குறளமுதம்", "திருக்குறள் நூல்கள்", "திருக்குறள்-ஆங்கிலக் கட்டுரைகள்", "திருக்குறள் -ஆங்கில மொழி பெயர்ப்பு" (எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை) ஆகிய 4 நூல்களை அச்சிட்டு அளித்தமைக்காக அச்சுச் செலவுத் தொகையாக ரூ. 1,60,429/-ம் வழங்கப்பட்டது.

**பணிப்பிரிவு**

*59. நூல் விற்பனை முனைப்புத் திட்டம்*

**13.5.1996க்கு முன்**

----------

**இந்த ஆட்சியில்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக் கழகம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், தமிழ் வளர்ச்சி இயக்ககம் ஆகிய வற்றில் வெளியிடப்படும் நூல்களை வாங்க விரும்பு வோருக்கு அவை ஒரே இடத்தில் உரிய நிலையில் கிடைப்பதில்லை என்ற மனக்குறை நெடுங்காலமாக இருந்தது. இதனைப் போக்கும் வகையில் எல்லா மாவட்டங்களிலும் ஒரே இடத்தில் நூல் கிடைக்கு மாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சேலம் அருங்காட்சியகம், மதுரை நியூ செஞ்சுரி புத் தக நிலையம், கோவை விசயா பதிப்பகம், சென்னை யில் நான்கைந்து நூல் விற்பனையகங்கள் ஆகியவை முன்னணியில் உள்ளன.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தில் வெளியாகி 5, 6 ஆண்டுகளாகத் தேங்கிக்கிடந்த 'தமிழ் - தமிழ்

அகராதி'யில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படிகளை இந் நிறுவனங்கள் பெற்று விற்பனை செய்துள்ளன. தமிழக அரசு வெளியீடுகள் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் கிடைக்க ஆவன செய்யப்படுகின்றது.

**பணிப்பிரிவு**

*60. நூற்றாண்டு விழாக்கள்*

இந்த ஆட்சியில்

தமிழுக்குத் தொண்டு செய்து மறைந்த சிந்தாமணிச் செல்வர்மே.வீ. வேணுகோபால பிள்ளை, பெரும்புலவர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை, மங்கலங்கிழார், தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கம், தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்களும், மனோன்மணியம் சுந்தரனார் நினைவு நூற்றாண்டு விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

**பணிப்பிரிவு**

*61. பாகம் 1 - தமிழ்*

**13.5.1996க்கு முன்**

11,12ஆம் வகுப்புகளில் பலர்பாகம் 1இல் தமிழை எடுக்காமல் பிரெஞ்சு அல்லது சமற்கிருத மொழியைப் பாடமாக எடுத்துப் படித்தனர். காரணம் அவர்கள் படிப்பது முதல் வகுப்புக்கான பிரெஞ்சு மொழிப்பாடம் (Preliminary French). அதில் 200க்கு 200 அல்லது 195 என்று மதிப்பெண் வாங்குவர். மொத்த மதிப்பெண்களைக் கூட்டும்போது தமிழை முதன்மொழியாக எடுத்தவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டுப் பிரெஞ்சு அல்லது சமற்கிருதம் படித்தவர்கள் விருதும் பரிசுகளும் படிப்பு உதவிகளும் பெற்று வந்தனர்.

**இந்த ஆட்சியில்**

தமிழக அரசு எடுத்த முயற்சியின் காரணமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பில் தமிழை முதன்மொழியாக

எடுத்துத் தேறி உயர் மதிப்பெண் பெறுபவர்களுக்கு மட்டும் தமிழக அரசின் முதற்பரிசும், மேல்படிப்புக் கான உதவியும் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, 10ஆம் வகுப்பில் தமிழை முதன்மொழி யாக எடுத்து உயர் மதிப்பெண் பெற்றோர் 11, 12 ஆம் வகுப்புப் படிக்க அரசின் படிப்பு உதவித்தொகை பெறுகின்றனர். 12ஆம் வகுப்பில் தமிழை முதன் மொழியாக எடுத்து உயர்மதிப்பெண்கள் பெற்றுக் கல்லூரிக்கோ, தொழில்நுட்ப, மருத்துவப் படிப்புக்கோ செல்பவர்கள் அரசின் படிப்புதவி பெறுகின்றனர். 1998ஆம் ஆண்டில் இவ்வுதவி பெற்றோர் 235 பேர்.

**பணிப்பிரிவு**

*62. பேச்சொலிப் பிழை நீக்கக் குறும்படம் தயாரிப்பு*

**இந்த ஆட்சியில்**

மக்கள் செய்தி ஊடகங்களிலும், பொதுவகையிலும் தமிழ் உச்சரிப்பை நெறிப்படுத்தும் நோக்கில் "பேச் சொலிப் பிழைநீக்கக் குறும்படம்" தயாரிக்க வல்லு நர் குழு அமைக்கப்பட்டது. குறும்படத் தயாரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*63. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்*

**13.5.1996க்கு முன்**

எவையும் இல்லை

**இந்த ஆட்சியில்**

1997-98ஆம் நிதியாண்டில் சேலம், தஞ்சாவூர், விருது நகர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் மண்ட லக் கலை பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப் பட்டன. தற்போது மேலும் இரண்டு மண்டலக் கலை - பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிடப்பெற்ற நான்கு மண்டல அலுவலகங் களுக்கு மாருதி மூடுந்து வழங்கப்பட் டுள்ளது.

**பணிப்பிரிவு**

*64. மழலையர் பள்ளிகளில் தமிழ்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

தமிழ்நாட்டில் எந்தவொரு வகுப்பிலும் தமிழே பயிலாமல் பட்டம் பெற்றுவிடும் நிலை இருந்து வந்தது. இந்நிலையை மாற்றத் தற்போது அரசு சிறப்பான நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் மொழியை ஒரு பாடமாகச் சொல்லித்தரும் மழலையர், தொடக்கநிலைப் பள்ளிகளுக்கே அரசின் ஏற்பு வழங்கப்படும் என்றும், தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டணங்களில் சலுகை வழங்கப் படும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் ஐந் தாம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களும் தமிழில் அல்லது தாய்மொழியில் பயிற்றுவிக்கப்படும் என் றும் அரசு ஆணையிட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*65. மொழிப்போர்க் காவலர்கள்*

**13.5.1996க்கு முன்**

1608 மொழிப்போர்க் காவலர்கள், எல்லைப் போராட்ட வீரர்கள் ஆகியோருக்கும், 327 மரபுரிமையருக்கும் மாதம் உரூ. 400/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டது.

**இந்த ஆட்சியில்**

1998இல் மேலும் 387 பேருக்கும் 1999இல் 159 பேருக்கும் மொழிப்போர்க் காவலர்க்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. உரூ.400/- ஆக இருந்த ஓய்வூதியம் உரூ.500/-ஆகவும், பின்னர் உரூ. 1500/- ஆகவும், அதன்பின் உரூ.3,000/- ஆகவும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி வழங்கப்படுகிறது. மருத்துவப்படி உரூ.15/-ம்

சேர்கிறது. இவ்வகையில் 2171 பேர் மாதம் உரூ. 3015/-ம், மரபுரிமையர் 458 பேர் மாதம் உரூ.1515/- உம் பெறுகின்றனர். அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப் பெறுகிறது. மொழிப் போக்காவலர்களின் பிள்ளைகட்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமையும் வழங்கப் படுகிறது.

**பணிப்பிரிவு**

*66. யாழ் நூலகத்துக்கு நூல்கள் நன்கொடை*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

இலங்கை அரசு வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணம் நூலகத்திற்குச் சிறப்பு நேர்வாக, நூல்களை வாங்கி அளிக்கத் தமிழக அரசு முடிவு செய்தது. அதற்கிணங்க, முதல் தவணையாக 1738 நூல்கள் இலங்கை நாட்டிற்கு 5.1.98 அன்று வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது தவணையாக 835 நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேற்காணும் 2,573 நூல்களுக்கும் உரூ.54,141,- செலவிடப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*67. வரலாறு*

**13.5.1996க்கு முன்**

1970 முதல் 1996 வரை 26 ஆண்டுகளில் தொல் பழங்காலம், சங்ககாலம் (வாழ்வியல்), சங்ககாலம் (அரசியல்), பல்லவர் பாண்டியர் காலம் (முதற் பகுதி) ஆகியன வெளி வந்துள்ளன.

**இந்த ஆட்சியில்**

41/2 ஆண்டுகளில் -

பல்லவர் - பாண்டியர் காலம் - பகுதி 2

| | |
|---|---|
| சோழப் பெருவேந்தர் காலம் | - பகுதி 1 |
| சோழப் பெருவேந்தர் காலம் | - பகுதி 2 |
| பாண்டியப் பெருவேந்தர் காலம் | - பகுதி 1 |

ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழக வரலாறு - ஒரே தொகுதியாகவும் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

**பணிப்பிரிவு**

*68. வானூர்தியில் தமிழ்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

வெளிநாடுகளிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து வெளிநாடுகளுக்கும் செல்லும் வானூர்திகளில் அறிவிப்புகள் தமிழிலும் செய்யப்படுகின்றன.

(எ-டு) பிரிட்டிசு ஏர்வேசு, ஏர் பிரான்சு, சிங்கப்பூர் ஏர்லைன்சு, மலேசியன் ஏர்லைன்சு சிஸ்டம்.

ஆனால், இந்தியாவிற்குள் பயன்படுத்துகிற எந்த வானூர்தியிலும் தமிழில் அறிவிப்புகள் இல்லை. இதுகுறித்து ஏற்கனவே மாண்புமிகு வானூர்திப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சி.எம். இப்ராகீம் அவர்களுக்கு முறைப்படி மடல் எழுதப் பட்டது. நினைவூட்டல்கள் தொடர்கின்றன. இன்னும் அதற்கான முழுநிலை எய்தப்படவில்லை.

**பணிப்பிரிவு**

*69. வானொலி*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

வானொலியில் இன்று பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப் படுகின்றன. அவற்றில் 'நாளொன்று பிறக்கச் சொல் ஒன்று அறிவோம்' எனும் நிகழ்ச்சி மிகவும் குறிப் பிடத்தக்கது. முன்னைய இயக்குநர் திரு. விசய திருவேங்கடம் இந்த நல்ல நிகழ்ச்சிக்கு வித்திட் டார். 1.11.96இல் இந்த நிகழ்ச்சி தொடங்கப்பட்ட போது தொடக்கவுரை நிகழ்த்தும் வாய்ப்பு துறை அமைச்சருக்கு.

ஒவ்வொரு நாளும் காலை 7.40க்கு இந்த நிகழ்ச்சி தொடங்கி இரண்டு மூன்று மணித்துளிகள் நீடித் தாலும் ஈராண்டுக்குமேல் இது வெற்றிக்கொடி நாட்டி வருகிறது.

சில சொற்களை மட்டும் எடுத்துக்காட்டுக்குத் தரு கிறோம். இதில் மாறுபாடு உண்டு. சில சொற்களை மாற்றி அமைக்கலாம் என்பது வேறு. ஆனால் நல்ல முயற்சி ஒன்று நாளும் நடக்கிறது. தமிழ் வளர்ச் சிக்கு வானொலி உறுதுணையாக உள்ளது என்பது மட்டும் உண்மை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 24.08.97 | AmusementPark | | பொங்கு உவகைப் பூங்கா |
| 2. | 25.08.97 | Autograph | | வாழ்த்தொப்பம் |
| 3. | 26.08.97 | Buzzer | | இமிரி |
| 4. | 27.08.97 | Circus | | அருந்திறல் அரங்கு, வட்டரங்கு |
| 5. | 28.08.97 | Cut Service | | குறைப்புச் சேவை |
| 6. | 26.08.97 | Glare | | கூசொளி |
| 7. | 30.08.97 | Goodwill | - | வணிக நற்பெயர் |
| 8. | 31.08.97 | Ground Support | - | தள ஆயத்தம் |
| 9. | 01.09.97 | Quotation | - | விலைப்புள்ளிகள் |
| 10. | 02.09.97 | Suspense | - | ஆவல் தவிப்பு |

**பணிப்பிரிவு**

*70. விருதுகள்*

**13.5.1996க்கு முன்**

சிறந்த தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் திருவள்ளுவர் விருது, திரு.வி.க. விருது, பாரதிதாசன் விருது ஆகியவை வழங்கப்பட்டன. ஒவ்வொரு விருதும் உரூ.20,000/- கொண்டது.

**இந்த ஆட்சியில்**

1997 முதல் பாரதியார் விருது வழங்கப்பட்டு வருகிறது. அன்றியும் 1998 முதல் திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன் விருதுகளும், 1999 முதல் திருவள்ளுவர் விருதும் உரூபாய் ஒரு இலட்சமும், தங்கப் பதக்கமும் கொண்டதாக வழங்கப்படுகின்றன. தொடர்ந்து இவ்வாறே வழங்கப்படும்.

கி.பி. 2000 முதல் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது வழங்கப்படுவதற்கான அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*71. விளம்பரப் பலகை*

**13.5.1996க்கு முன்**

வணிகச் சொற்பட்டியலுக்கான குழு ஒழிக்கப்பட்டுக் கோப்பு முற்றாக்கப்பட்டிருந்தது. இது அவசியமில்லை என்ற குறிப்பும் இருந்தது.

**இந்த ஆட்சியில்**

புதிய குழு அமைக்கப்பட்டு 515 சொற்கள் அடங்கிய 'வணிக நிறுவனப் பெயர்ப் பலகைகளில் தமிழ்' எனும் நூலின் முதற் பதிப்பு வெளியிடப்பட்டது. சிங்கப்பூர்தேசியப் பல்கலைக்கழகம் இதனை இணையத்தில் வெளியிட்டுள்ளது. முதற்பதிப்பைத் தொடர்ந்து இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1997இல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 537 வணிக நிறுவனப்

பெயர்கள் (தமிழில்) உள்ளன. தெளிதமிழ் இதழும், உங்கள் அதிபதி எனும் வணிகர்கள் இதழும், மேலும் சில இதழ்களும் இப்பட்டியலைச் சிறிது சிறிதாக வெளியிட்டு வருகின்றன.

மேலே தமிழில் பெரிய எழுத்திலும், அடுத்து ஆங்கி லத்திலும், அடுத்து விரும்புகின்ற மொழியிலும் எழுதிட ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை அரசு ஆணையைக் கடைப்பிடிக்காத நிறு வனங்கள் மீது, நடவடிக்கை எடுத்தால் அவர்கள் 50/- தண்டம் கட்ட வேண்டுமென, ஆணை இருந்தது.

தற்போது அத்தகைய குற்றத்திற்கு உரூ. 1000/- தண் டம் கட்ட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*72. வெளி மாநிலம்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

கல்கத்தாவிலும், மும்பையிலும் தமிழ் மையம் அமைத்திட உரூ. 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. மையங்கள் இரண்டும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. தற்போது தட்டச்சர் நிலை யிலான இள நிலை உதவியாளர் ஒருவர் ரூ. 5000/- தொகுப்பூதியத்திலும், அலுவலக உதவியாளர் ஒரு வர் ரூ. 3000 - தொகுப்பூதியத்திலும் அமர்த்தப்பட் டுள்ளனர்.

மேலும், உரூ 10,000 செலவிலான நூல்கள் அடங் கிய நூலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வாரந் தோறும் சங்க இலக்கிய வகுப்பு எடுப்பதற்கும்,

திருக்குறள் வகுப்பு எடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2. திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளியில் பேரா. பி. சுந்தரம்பிள்ளை நினைவாக நூலகக் கட்டடம் கட்டுவதற்குத் தமிழக அரசு உரூ. 10 இலட்சம் வழங்கியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு மானியமாக இந்நிறுவனத்திற்கு உரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

3. ஒரிசா மாநிலத்தில் உள்ள உத்கல் பல்கலைக் கழகத்தில் "தமிழ் இருக்கை" தொடங்குவதற்காக உரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப் பட்டுள்ளது.

**பணிப்பிரிவு**

*73. வெளிநாட்டு உதவி*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

மொரீசியசுத் தீவில் வாழும் தமிழாசிரியர்களுக்கும், இசையாசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கத் தமிழ் நாட்டிலிருந்து தமிழ் ஆசிரியர் ஒருவரையும், இசையாசிரியர் ஒருவரையும் மொரீசியசுத் தீவிற்கு ஓராண்டு காலத்திற்கு அனுப்பவும், இத்திட்டத்தை மொரீசியசில் மகாத்மா காந்தி நிறுவனம் மூலம் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மொரீசியசுத் தீவில் வாழும் தமிழாசிரியர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பயன்படும் வகையில் மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்தை மையமாகக் கொண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் அஞ்சல் வழிக் கல்வித்துறை இயங்கத் தொடங்கியுள்ளது. அதன் வாயிலாக பி. ஏ., (தமிழ்), பி.லிட்., எம். ஏ., (தமிழ்)

ஆகிய பாடங்கள் நடத்தப்படுகின்றன. வெகுவிரைவில் இந்தப் பாடத்திட்டம் தென் ஆப்பிரிக்காவின் டர்பன் நகருக்கும், ரீயூனியன் நாட்டுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

**பணிப்பிரிவு**

*74. வெளிநாடுகட்கு நூல் அனுப்பும் திட்டம்*

**13.5.1996க்கு முன்**

**இந்த ஆட்சியில்**

தேர்ந்தெடுக்கப்பெற்ற வெளிநாடுகளுக்குத் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான நூல்களை அன்பளிப்பாக வழங்குவதற்கெனப் பகுதி-11 திட்டத்தின் கீழ் அரசு உரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நூல்கள் வாங்கப் பெற்று 20 வெவ்வேறு நாடுகளுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் மொரீசியசு, சிங்கப்பூர், யாழ்ப்பாணம், ரீயூனியன், பக்ரைன், செருமணி, ஆஸ்திரேலியா, மியான்மர் ஆகிய நாடுகளுக்கு நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன. பிற நாடுகளுக்கும் அனுப்பிட ஏற்பாடு நடந்து கொண்டுள்ளது. ஒப்பளிப்புச் செய்யப் பட்டுள்ள தொகை உரூ. 5 இலட்சத்தில் இதுவரை நூல்கள் வாங்கியமை, அனுப்புகைச் செலவு 8 ஆகிய இனங்களில் மொத்தம் உரூ. 4,47,780/- செலவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இவ்வாண்டில் ஆஸ்திரேலியாவில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திடமிருந்து பெறப்பட்ட 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு தலைப்பிலும்

50 தொகுதிகளும், 8 முதல் 12-ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு தலைப்பிலும் 30 தொகுதிகளும் ஆக மொத்தம் 2, 520 நூல்கள் இலவசமாக வழங்கப் பட்டன.

**பணிப்பிரிவு**

*75. 2000க்குள் "எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்" - சிறப்பாய்வு*

**இந்த ஆட்சியில்**

தமிழக அரசின் அனைத்து அலுவலகங்களிலும் 2000-க்குள் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' எனும் நிலை எய்திடச் சிறப்பாய்வுத் திட்டம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், மாவட்ட உதவி இயக்குநர் மேற்பார் வையில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் குழு ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள அரசு அலுவலகங் களில் ஆய்வு செய்கிறது. இந்த ஆய்வு அரசு அலு வலர்களிடையே ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் குறித்து புதிய விழிப்புணர்வை உருவாக்கி, ஆட்சி மொழித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்தி வருகிறது. இவ் வாண்டு 10000/- அலுவலகங்கள் இவ்வகையில் ஆய்வு செய்து முடிக்கப்பட்டன.

